
Registered as a News Paper in Sri lanka
விலை : ரூபா 20 .00
தினப்பதிப்பு

# தினமுரசு


THINAMURASU

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 25 திங்கட்கிழமை (10.08.2015) பக்கங்கள் 20 ஓசை – 313





## ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)



# நீதிமன்றப் பிடியாணையில் தேடப்படுவோர் உடனடியாக கைது செய்யப்பட வேண்டும்

## நீதிபதி இளஞ்செழியன் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

குற்றச் செயல்களுக்காக நீதிமன்றத்தினால் தேடப்படும் நபர்கள், நீதித்துறை நீதிமன்ற பிடியாணையில் தேடப்படும் நபர்கள் தேர்தல் வன்முறையில் ஈடுபடக்கூடும். அதனை அனுமதிக்க முடியாது. அத்தகைய நபர்களை உடன் கைது செய்ய வேண்டும் என உத்தரவிட்டுள்ள நீதிபதி இளஞ்செழியன், இவ்வாறு தேடப்படுபவர்கள் அண்மையில் உள்ள நீதிமன்றங்களில் உடனடியாக சரணடைய வேண்டும் என கஞ்சா தண்டனைக் குறைப்பு வழக்கொன்றில் அளித்துள்ள தீர்ப்பில் அறிவுறுத்தியுள்ளார்.

தேர்தல் வன்முறைகளில் பாதாள உலகக் கோஷ்டியினர் ஈடுபடுவதைத் தடுப்பதற்காக நாடளாவிய ரீதியில் அவர்களைத் தேடிப் பிடித்து கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். இதற்கென சாதாரண பொலிஸாருக்கு மேலதிகமாக விசேட பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டு, நாட்டின் பல பகுதிகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன.

இந்த நிலையிலேயே யாழ்ப்பாணத்தில் நீதிமன்றத்தினால் தேடப்படுபவர்கள் மற்றும் பிடியாணையில் தேடப்படுபவர்களைக் கைது செய்யுமாறு நீதிபதி இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார்.

தேர்தல் வன்முறைக்கு யாழ்ப்பாணத்தில் இடமில்லை. வன்முறையில் ஈடுபடும் நபர்கள் சிறையில் அடைக்கப்படுவார்கள். பாரதூரமான குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ளவர்களுக்கு தேர்தல் தினத்தன்று வாக்களிப்பதற்கான பிணை அனுமதியும் வழங்கப்பட மாட்டாது என்றும் நீதிபதி இளஞ்செழியன் அந்தத் தீர்ப்பில் எச்சரிக்கை செய்துள்ளார்.

போதைப் பொருளாகிய கஞ்சாவை உடமையில் வைத்திருந்தார், அத்துடன் அதனை விற்பனை செய்தார் என குற்றஞ்சாட்டி, பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட 60 வயதுடைய வயோதிபர் ஒருவர் விளக்கமறியலில் இருந்து வருகின்றார்.

இந்த வயோதிபரைப் பிணையில் செல்ல அனுமதிக்கக் கோரி, யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் பிணைமனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு மீதான நீதிமன்ற விசாரணையின் போது தன்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்களுக்குத் தானே குற்றவாளி என அந்த வயோதிபர் ஒப்புக்கொண்டார். இதனையடுத்து, அவருக்காக நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணி, அவர் முற்குற்றம் எதனையும் செய்யவில்லை. அவருக்கு அறுபது வயது. சந்தர்ப்பவசத்தினாலேயே அவர் நீதிமன்றத்தின் குற்றக் கூண்டில் நிற்கின்றார். எனவே, அவருடைய வயதையும், முற்குற்றம் செய்யவில்லை என்பதையும் கவனத்திற் கொண்டு, அவருக்கு கட்டாய சிறைத் தண்டனைத் தீர்ப்பினை அளிக்காமல், தண்டப்பணம் விதித்து தீர்ப்பளிக்குமாறு நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்தார்.

வழக்கு விசாரணையையும், எதிரி தரப்பு சட்டத்தரணியின் விண்ணப்பத்தையும் ஆராய்ந்து தீர்ப்பளித்த நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்ததாவது,

தேர்தல் காலத்தில் வன்முறைகளைக் கட்டுப்பாட்டில் கொண்டு வரவேண்டும் என்பதற்காகவே, நீதிமன்றத் தாக்குதல் கைதிகள், போதைவஸ்து கைதிகள், வாள்வெட்டு மற்றும் கோஷ்டி சண்டித்தன கைதிகள், தெரு ரவுடித்தன கைதிகள் என பாரதூரமான குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ள கைதிகள், தேர்தல் முடிவடைந்து, புதிய நாடாளுமன்றம் கூடும் வரையில், பிணையில் வெளியில் வரமுடியாதவாறு, நீதிமன்ற கட்டளைக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள். தேர்தல் தினத்தன்று வாக்களிப்பதற்கும் இவர்களுக்குப் பிணை அனுமதி வழங் கப்படமாட்டாது,

நீதிமன்றமானது, தேர்தல் காலப்பார்வையாளரோ அல்லது கண்காணிப்பாளரோ அல்ல. வன்முறை குற்றவாளிகளை கட்டுப்படுத்த சட்ட நடவடிக்கை எடுக்கும் பாதுகாவலன். நீதிமன்றமே, சட்டத்தின் மேலான பாதுகாவலன்.




தேர்தல் வன்முறையால் வாக்காளர்களுக்கு இடைஞ்சல்கள் ஏற்படக் கூடாது. அதே போன்று வேட்பாளர்களுக்கும் எவ்வித இடைஞ்சல்களும் ஏற்படக் கூடாது என்பதற்காகாத் தான் பாரிய குற்றச்சாட்டு கைதிகள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். தேர்தல் வன்முறை இல்லாத இடமாக யாழ்ப்பாண மாவட்டத்தை வைத்திருக்க வேண்டிய கடமைப்பாடும் பொறுப்பும் நீதிமன்றங்களுக்கு உண்டு. ஆகவே, சட்டத்தை எவரும் கையில் எடுப்பதற்கு அனுமதிக்க முடியாது. நீதிமன்றப் பிடியாணையில் தேடப்படும் அனைத்து நபர்களும் தேர்தல் வன்முறையில் ஈடுபட முடியாதவாறு, கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே, தேடப்படுபவர்கள் அண்மையில் உள்ள நீதிமன்றங்களில் உடனடியாக சரணடைய வேண்டும்.

இந்த வழக்கின் எதிரி கஞ்சா விற்பனை செய்தமை, உடமையில் வைத்திருந்தமை என்பன அவர் செய்த குற்றங்களாகும். இந்தக் குற்றங்களைப் புரிந்த ஒருவருக்கு அதிகபட்சமாக ஓராண்டு கடுழியச் சிறைத்தண்டனை விதிப்பதற்கு போதைவஸ்து கட்டளைச் சட்டம் பரிந்துரை செய்கிறது. இருப்பினும் எதிரியின் சார்பில் செய்யப்பட்டுள்ள சட்டத்தரணியின் கருணை விண்ணப்பம் மன்றினால் பரிசீலிக்கப்படுகின்றது. அறுபது வயது வயோதிபர் தேர்தல் வன்முறைகளில் ஈடுபடக்கூடிய நபரல்ல. இவர், எதுவித முற்குற்றமும் செய்யவில்லை என்பதன் அடிப்படையில் மன்று அவருடைய வயதுக்கு மதிப்பளித்து, கட்டாய சிறைத் தண்டனையைத் தவிர்த்து, 40 ஆயிரம் தண்டம் செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகின்றது. தண்டத்தைச் செலுத்தத் தவறினால், ஓராண்டு சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும்.

இவ்வாறு நீதிபதி இளஞ்செழியன் தமது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

# உற்சவ காலங்களில் பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்

## யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அறிவுறுத்து





உற்சவ காலங்களில் பொதுமக்கள் தமது உடமைகளை பாதுகாத்துக்கொள்வதுடன் திருடர்கள் தொடர்பில் விழிப்பாக செயற்பட வேண்டும் என யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வை.வூட்லர் தெரிவித்தார்.

தனியார் தொழிற்துறை மாணவர்களுடனான கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது உற்சவ காலம் ஆரம்பமாகின்றது. வரும் 19 ஆம் திகதி நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவம் ஆரம்பமாகின்றது. இவ்விழாக்காலங்களில் தங்கநகைகளை அணிவதை தவிர்த்தல் நல்லது. தனியாளாக இல் லாது கூட்டாக தொடராக நபர்கள் இருப்பதால் திருடர்கள் தப்பிக்க வாய்ப்பு இருக்கின்றது. வழிபாட்டு தருணங்களில் இவை ஏற்படலாம் எனவே மக்கள் திருடர்கள் தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும்.

ஆலயங்களுக்குச் செல்லும் போது வீடுகளை நன்றாக சரியான முறையில் பூட்டிவிட்டுச் செல்லுங்கள் ஏனெனில் விழாக்காலங்களில் அதிகளவில் மக்கள் கூடுவதால் இவ்வாறு திருட்டுச் சம்பவங்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கின்றது.

இதுதொடர்பில் பொலிஸார் மட்டும் கவனம் செலுத்த முடியாது . பொதுமக்களும் இதனைத் தடுக்க முன்வரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# யாழ்.மாவட்டத்தில் 92 வீதமான வாக்குப்பதிவு

நாடாளுமன்ற தேர்லுக்கான தபால் மூல வாக்களிப்பு கடந்த 8ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ள நிலையில், யாழ். தேர்தல் மாவட்டத்தில் 92 சதவீத மானவர்களின் வாக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

யாழ். தேர்தல் மாவட்டத்தில் 15 ஆயிரத்து 13பேர் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.

இவர்களுக்கான வாக்களிப்பு கடந்த 3, 5, 6ஆம் திகதிகளில் நடைபெற்றிருந்தது. இத்தினங்களில் வாக்களிக்கத் தவறியவர்கள் வாக்களிப்பதற்கான இறுதி சந்தர்ப்பம் 8ஆம் திகதி மாலை 4.15 மணிவரை வழங்கப்பட்டிருந்தது எனத் தெரிவித்தார்.

# –கிளிநொச்சி மாவட்டத்தில்– நிர்ணய விலையில் நெல் கொள்வனவு

(கிளிநொச்சி)


கிளிநொச்சி மாவட்டத்தில் அறுவடை செய்யப்பட்டுள்ள சிறுபோக நெல், நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் நெல் சந்தைப்படுத்தும் சபையினால் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது.


கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாண்டு சிறுபோக செய்கைகளில் 14 ஆயிரத்து 500 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு அறுவடைகள் நிறைவடைந்து வரும் நிலையில, நெல்லுக்கான சரியான சந்தை வாய்ப்பு இன்மையால் தாங்கள் பெரும் நட்டத்தை எதிர்கொள்வதாக நெற்செய்கையாளர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், இவ்விடயம் தொடர்பாக மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கருத்து தெரிவிக்கும் போது, ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் நெல் சந்தைப்படுத்தும் சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்திருந்தார்.

அதன்படி தற்போது கிளிநொச்சி மாவட்டத்தின் வட்டக்கச்சி, கண்டாவளை, முழங்காவில் ஆகிய பகுதிகளில் உள்ள நெற்களஞ்சியசாலைகளில், நெல் சந்தைப்படுத்தும் சபையினால் நெற்கொள்வனவுகள் நடைபெற்று வருகின்றன.

ஒவ்வொரு விவசாயியிடமிருந்தும் தலா இரண்டாயிரம் கிலோகிராம் வீதம், சம்பா நெல் ஒரு கிலோகிராம் 50 ரூபாவுக்கும், சிவப்பு நாடு ஒரு கிலோகிராம் 45 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்பட்டு வருவதுடன் அதற்குரிய பணத்தினை உரிய முறைகளில் பெற்றுக்கொள்வதற்கு சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தும் சபையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.





நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்படுகின்ற வடக்கு வாசல் கோபுரத்திற்கான ஒன்பது தளங்களைக் கொண்ட இராஜகோபுரத்திற்கான கலசங்கள் வைக்கும் நிகழ்வு நேற்றுக் காலை 10 மணிக்கு இடம்பெற்ற போது.... (85)

Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

நாடாளுமன்றத் தேர்தல் - 2015



ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி



# போர்க்குற்றத்திற்கு எத்தகைய விசாரணை

## குழம்புகிறது கூட்டமைப்பு

(யாழ்ப்பாணம்)

இறுதிக்கட்டப் போரில் இடம் பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல் மற்றும் போர்க் குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக எவ்வாறான விசாரணையை மேற்கொள்ளவேண்டுமென்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சிகளிடையே குழப்பமான நிலை நீடித்து வருகிறது.

நேற்றையதினம் நீர்வேலியில் அமைந்துள்ள கூட்டமைப்பின் அலுவலகத்தில் ஊடகவியலாளர் மாநாட்டை நடத்திய சுரேஷ் பிரமச்சந்திரன் இறுதிக் கட்டப் போர் தொடர்பான மனித உரிமை மீறல் மற்றும் போர்க் குற்றச் சாட்டுக்கள் தொடர்பான உள்ளக விசாரணைப்பொறிமுறையை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ளாது எனவும் குறித்த உள்ளக விசாரணையை கூட்டமைப்பு ஏற்றுக் கொண்டதாக எவரும் கூறமுடியாதெனவும் தெரிவித்தார்.

ஜெனிவா மனித உரிமைச் சபையின் சர்வதேச விசாரணையை உள்ளகப்பொறி

19 ஆம் பக்கம் பார்க்க

### ஐ.நா.விசாரணை அறிக்கை குறித்த

## சுமந்திரனின் குற்றச்சாட்டை மறுக்கிறார் கெலும் மக்ரே

(கொழும்பு)

சனல் - 4 தொலைக்காட்சியில் வெளியான, கசியவிடப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணை அறிக்கை என்ற செய்தி உண்மையானது என்று சுதந்திர ஊடகவியலாளர் கெலும் மைக்ரே தெரிவித்துள்ளார். அந்தச் செய்தி திரிபு படுத்தப்பட்டது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்

19 ஆம் பக்கம் பார்க்க

## சுமந்திரனுக்கு எதிராக கறுப்புக்கொடி போராட்டம்?

### வவுனியாவில் சிவில் அமைப்புக்கள் தீர்மானம்

(வவுனியா)

வவுனியாவில் நடைபெறவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டத்திற்கு கூட்டமைப்பின் முன்னாள் தேசியப் பட்டியல் எம்.பியும் யாழ் மாவட்ட வேட்பாளருமான எம்.ஏ.சுமந்திரன் கலந்து கொண்டால் கறுப்புக் கொடி போராட்டம் நடத்துவது என வவுனியாவின் சில சிவில் அமைப்பு

19 ஆம் பக்கம் பார்க்க


## எக்னெலிகொட கடத்தல் இராணுவ மேஜர் கைது

(கொழும்பு)

ஊடகவியலாளர் பிரதீப் எக்னெலிகொடவின் காணாமற் போதல் சம்பவத்துடன் தொடர்புடையதாக காணப்படும் இராணுவ மேஜர் ஒருவர் நேற்று குருநாகலையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

19 ஆம் பக்கம் பார்க்க

## சுனாமியால் காணாமற்போன சிறுவன் பிக்குவின் பாதுகாப்பிலிருந்து மீட்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, நிராவிப் பிட்டியைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் கடந்த சுனாமி அனர்த்தத்தின் போது காணாமற்போன நிலையில், கடந்த 30 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

சுனாமி அனர்த்தம் இடம் பெற்ற காலப்பகுதியில் முல்லைத்தீவு நிராவிப்பிட்டியில் உள்ள பாடசாலை ஒன்றினுள் தற்காலிகமாக வசித்துவந்த வேளையில் குறித்த சிறுவன் காணாமற்போயுள்ளான்.

ஜெகநாதன் குருதேவன் (வயது - 11) என அழைக்கப்படும்

19 ஆம் பக்கம் பார்க்க

## இறுதி அரசியற் கைதி சரத் பொன்சேகாவே

### அரசாங்கம் தெரிவிப்பு

(இலண்டன்)

இலங்கையின் இறுதி அரசியற் கைதி முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவே அவரும் விடுதலை செய்யப்பட்டுவிட்டார். எனவே அரசியற் கைதிகளென இலங்கைச் சிறைகளில் எவரும் இல்லையென நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பி.பி.சி தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அந்தச் செவ்வியில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

தற்போதைய நிலையில் அரசியல்கைதிகள் குறித்தோ அல்லது காணாமற்போனவர்கள் விவகாரத்தை எவ்வாறு கையாள்வது என்பது குறித்தோ அரசாங்கத்தினால் எந்த வித தீர்மானங்களையும் எடுக்க முடியாது, அடுத்த நாடாளுமன்றத்தில் புதிய அமைச்சரவையின் கீழ்

19 ஆம் பக்கம் பார்க்க

## மகிந்தவுக்கு ஆதரவு கபில மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்குமாறு கோரி புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுத்ததாக தேசிய புலனாய்வு பிரிவின் முன்னாள் பணிப்பாளர் கபில ஹெந்த விதாரண மீது குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இம்முறை பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பாக குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடுகின்றார்.

19 ஆம் பக்கம் பார்க்க

### புலிகளுக்கு பணம் வழங்கிய விவகாரம்

## மகிந்தவை விவாதத்திற்கு அழைக்கிறார் சம்பிக்க

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவின் பணிப்புரையில் 2006 ஆம் ஆண்டு ராடா நிறுவனத்தின் ஊடாக விடுதலைப் புலிகளுக்கு 8000 இலட்சம் ரூபா பணம் கொடுத்ததாக கூறப்படும் முறைப்பாடு தொடர்பில், பகிரங்க உரையாடல் மேற்கொள்ள வருமாறு மகிந்த ராஜபக்ஷவுக்கு சவால் விடுப்பதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க அழைப்பு விடுத்துள்ளார். தீவிரவாதிகளுக்கு

19 ஆம் பக்கம் பார்க்க

மனதில் தோன்றும் வார்த்தைகளெல்லாம் வெளியில் வந்தால் பெறுமதியில்லை. - அன்புவழியூர்க் கவிராயர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## பழைய ஆணைகள் என்னாச்சு?

“இனப்பிரச்சினையின் தீர்வுக்கு நாம் சமஷ்டி முறையை முன்வைத்துள்ளோம். இதற்கு எமது மக்கள் இந்தத் தேர்தலில் முழுமையாக அங்கீகாரமளித்து சர்வதேசத்திற்கு எமது அபிலாஷையை வெளிப்படுத்த வேண்டும்” என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் களுவாஞ்சிக்குடி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு யுத்தம் மூலம் தீர்வு கிடைக்கப் போவதில்லை என்பது பட்டவர்த்தனமாகி ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த ஆறு ஆண்டுகளும் கூட பாராளுமன்றத்தில் தமிழ் மக்களின் பெரும்பான்மைப் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருந்தவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தான்.

கடந்த ஆறு மாதங்களுக்கும் மேலாக, தாங்கள் கொண்டு வந்ததாகச் சொல்லிக்கொண்ட மைத்திரி–ரணில் ஆட்சியில் அதன் உயர் சபையான தேசிய நிறைவேற்றுச் சபையிலும் அங்கத்துவம் வகித்துள்ளார்கள்.

இந்த ஆட்சியைக் கொண்டு வருவதற்கு முன்னும் கொண்டு வந்த பின்னும் அதன் தலைவர்களோடு நெருக்கமாகப் பேசிச் செயற்பட்டிருக்கிறார்கள். ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னம், தீர்வு தொடர்பில் வாய்மூலமான வாக்குறுதிகளைக் கூடப் பெற்றிருப்பதாகத் தமிழ் மக்களுக்குச் சொல்லியிருந்தார்கள்.

இதுவரைகாலமும் பேசிப் பழகிக் கொண்டாடியது மட்டுமல்லாது, அந்தத் தெற்குத் தலைவர்கள் ஆட்சியில் அமர்வதற்கும் ஒத்தாசை புரிந்த இவர்கள், எத்தகைய ஒரு தீர்வுக்கு அவர்களைச் சம்மதிக்கச் செய்யலாம் என்பதை அறிந்து கொள்ளவில்லையா?

தமிழ் மக்களிடம் வந்து தேர்தல் முழக்கம் செய்யும்போது மட்டும், அவர்களைப் பற்றிய – அவர்கள் செய்வார்கள் என்று தமிழ் மக்களுக்கு முன்னர் வாக்குறுதிகள் அளித்த – விடயங்கள் பற்றி எதுவுமே பேசாமல், ‘நாங்கள் முன்வைக்கும் தீர்வு இது’ என்று சொல்லிக் கொண்டிருப்பது என்ன மாதிரியான ஒரு நாடகம்?

சமஷ்டி முறைக்குத்தான் தமிழ் மக்கள் பல காலமாக அங்கீகாரத்தின் மேல் அங்கீகாரமாக அளித்துக் கொண்டேயிருக்கிறார்களே! அதன் அடுத்த கட்டம் பற்றியோ சாத்தியங்கள் பற்றியோ நீங்கள் கூடிக் குலாவிய தெற்குத் தலைவர்களிடம் பெற்றுக்கொண்ட பெறுபேற்றைச் சொல்லாமலே, மீண்டும் வந்து மக்களின் ஆணை தேவை என்பது என்ன கூத்து?

சமஷ்டிக்கான தமிழ் மக்களின் அங்கீகாரத்தை, சர்வதேசத்திற்கும் தான் எத்தனையோ முறை காட்டியாகி விட்டதே! இந்த முறையும் மக்கள் காட்டுவதற்கு, எங்கிருந்தாவது ஏதாவது புதிய நகர்வோ பிடியோ கிடைத்திருப்பதாக நீங்கள் காண்பிக்க வேண்டுமல்லவா?

இதுவரை தமிழ் மக்கள் காட்டிய ஒற்றுமைக்கும் திரண்ட வாக்களிப்புக்குமாக இந்த சமஷ்டி விஷயத்தில் நீங்கள் காட்டிய முன்னேற்றம் என்ன?

உள்நாட்டுத் தெற்குத் தலைவர்கள் எவருமே உங்கள் சமஷ்டிக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை என்பது மாத்திரமல்ல, சர்வதேசப் பிரதிநிதிகள் யாராவது அதை ஆதரித்துச் சொல்வதையாவது தமிழ் மக்கள் கேட்கச் செய்திருக்க வேண்டுமல்லவா?

உங்கள் சமஷ்டிக்குள் அடங்கும் அதிகாரங்கள் விஷயங்கள் இவையிவை என்றாவது மேற்குறித்த தலைவர்களுக்கும் பிரதிநிதிகளுக்கும் விளக்கமளித்து அவர்களது இணக்கத்தைப் பெற முயற்சித்திருக்கிறீர்களா?

எதையுமே செய்யாமல் சாத்தியபூர்வமான எந்த நகர்வையுமே காண்பிக்காமல், “சமஷ்டிக்கு உங்கள் ஒற்றுமையான அங்கீகாரத்தைக் காட்டுங்கள்” என்று தமிழ் மக்களிடம் இன்னும்.எத்தனை தேர்தல்களுக்கு வந்து கேட்டுக் கொண்டிருக்கப் போகிறீர்கள்?

- ஆசிரியர்

# மோசடி விசாரணைப் பிரிவுக்கு சாவுமணி அடிப்பேன்

## தளராத துணிவுடன் மகிந்த

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 117 ஆசனங்களை வெற்றி கொள்ளும் என முன்னாள் ஜனாதிபதியும் குருநாகல் மாவட்ட வேட்பாளருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து நடை பெறும அமைச்சரவைக் கூட்டத்தில் மோசடி தவிர்ப்பு பொலிஸ் பிரிவு குறித்து தீர்மானம் எடுக்கப்படும் என்றும் ,அவர் தெரிவித்துள்ளார்.

மோசடி தவிர்ப்பு பொலிஸ் பிரிவே மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான நிதிக்குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருகிறது.

இந்த நிலையில் தமது ஆட்சியின் போது குறித்த பிரிவு மேற்கொண்டு வரும் விசாரணைகள், பொலிஸாரிடம் கையளிக்கப்படும் என்றும் மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

# மோசடிக்காரர்களுக்கு புதிய அரசில் இடமில்லை

## அசையாத நம்பிக்கையில் ரணில்

(கொழும்பு)

தேர்தலின் பின்னர் உருவாக்கப்படும் புதிய அரசாங்கத்தில், மோசடிக்காரர்களுக்கு அமைச்சர் பதவிகளை வழங்காமல் இருப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோர் தீர்மானித்துள்ளனர்.

தீவிர ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள, பாதாள குழுக்களுடன் தொடர்பு வைத்துள்ள எந்த ஒரு அரசியல்வாதிக்கும் அமைச்சுப் பதவி இல்லையென வலியுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட ஊழல மற்றும் பாதாள குழுக்களுடன் தொடர்பு வைத்திருந்தமை தொடர்பில் நீண்ட நேர பேச்சுவார்த்தைகளை நடாத்திய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இத்தீர்மானத்தை மேற்கொண்டுள்ளனர்.

தீவிர ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள, பாதாள குழுக்களுடன் தொடர்பு வைத்துள்ள எந்தவொரு அரசியல்வாதிக்கும் தேர்தலின் பின்னர் உருவாக்கப்படும் புதிய அரசாங்கத்தில் அமைச்சர் பதவிகள் வழங்கப்படாதென மத அமைப்புகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களுக்கு இரண்டு கட்சி தலைவர்களும் தகவல் வழங்கியுள்ளனர்.

இதற்கமைய ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் அனைத்து தகவல்களையும் பெற்றுக்கொண்டுள்ள நிலையில் பாதாள குழுக்களுடன் தொடர்பு வைத்திருக்கும் அரசியல்வாதிகள் தொடர்பில் பாதுகாப்பு பிரிவுகளின் அறிக்கைகளை பெற்றுக்கொள்வதற்கு ஜனாதிபதி மற்றும் பிரதமர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

## இன்று மட்டும் வாய்ப்பு

(கொழும்பு)

வாக்களிபபதற்கு தேர்தல்கள் செயலகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அடையாள அட்டைகள் இல்லாதவர்கள், வழங்கப்படும் தற்காலிக அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள ஆர்வம் காட்டுமாறு பவ்ரல் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலில் வ்ாக்களிக்கத் தகுதி பெற்ற வாக்காளர்களுக்கான தற்காலிக அடையாள அட்டை விநியோகம் இன்று மாத்திரமே இடம்பெறும் எனவும் பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று அதிகாரி ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

## கிடைக்கவில்லையா வாக்காளர் அட்டை

### தபாலகம் செல்லவும்

அரச விடுமுறை தினமான நேற்றும் விசேட தினமாகக் கருதி வாக்காளர் அட்டைகள் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தபால் மா அதிபர் ரோஹண அபேரத்ன தெரிவித்துள்ளார்.

வாக்காளர் அட்டைகள் கிடைக்காதவர்கள் அருகிலுள்ள தபால், உப தபால் நிலையங்களுக்குச் சென்று ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தி அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறும் தபால் மா அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இன்றுடன் அனைத்து வாக்காளர் அட்டைகளும் விநியோகித்து முடிக்கப்படவுள்ளது.

பொதுத் தேர்தலை முன்னிட்டு இதுவரையில் 8.2 மில்லியன் வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## தேர்தல்களம் கிழக்கிலும் சூடு

(கொழும்பு)

இலங்கையில் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்கள் ஒன்றாக வாழும் மாகாணங்களில் முக்கியமானதான கிழக்கு மாகாணத்தில் நாடாளுமன்றத் தேர்தல் சூடுபிடித்திருக்கிறது.

மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய இந்த மாகாணத்தில் இந்த மூவின மக்களும் தமது இனம் சார்ந்த அடிப்படையிலேயே வேட்பாளர்களுக்கு வாக்களிக்க முனைவதாக அங்குள்ளவர்கள் கூறுகிறார்கள்.

அதேவேளை, தமிழ்மக்களை பொறுத்தவரை அங்கு தமது இனப்பிரச்சினைக்கான தீர்வை அடிப்படையாகக் கொண்டு வாக்களிப்பதா அலலது போரால் பாதிக்கப்பட்ட அங்கு அபிவிருத்திகோரி வாக்களிப்பதா என்ற வாதப் பிரதிவாதங்கள் அவரகள் மத்தியில் காணப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

# முகப்புத்தகத்தில் வினாத்தாள் வெளியாகிய மர்மம் என்ன?

## நீதி கேட்டு எழும் குரல்கள்

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள பொறியியல் தொழில்நுட்ப பாடத்துக்கான வினாத்தாள் பரீட்சை நடைபெற முன்னர் மாணவர் ஒருவரின் முகநூல் பக்கத்தில் வெளியிடப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

மாணவர்கள் குழுவொன்று இது தொடர்பில் பரீட்சைகள் திணைக்களத்துக்கும், ஜனாதிபதி செயலகத்துக்கும் முறைப்பாடு செய்துள்ளனர்.

குறித்த வினாத்தாள் நேற்று முன்தினம் சனிக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு நடைபெறும் பரீட்சையில் வழங்கப்படவிருந்தது.

இந்த வினாத்தாளின் ஒரு பகுதி முதல் நாளான வெள்ளிக்கிழமை மாலை “பேஸ் புக்” பகுதியில் வெளியாகியுள்ளது.

இந்த முகநூல் பகுதியில் வெளியாகியிருந்த பரீட்சை வினாத்தாளும் பரீட்சையில் வழங்கப்பட்ட வினாத்தாளும் ஒரே மாதிரியாக அமைந்திருந்ததாக மாணவர்கள் முறைப்பட்டுள்ளனர்.

இதனால் தமக்கு அநீதியிழைக்கப்பட்டுள்ளதாகவும், நீதியைப் பெற்றுத்தருமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மாணவர்கள் கேட்டுள்ளனர்.

# கண்ணை நம்பாதே! இணையம் ஏமாற்றும்

**இணையத்தின்** ஆக்கபூர்வமான பயன்பாடு பற்றியும் அதன் வீச்சு பற்றியும் இணையம் பயன்படும் விதம் பற்றியும் எழுதிக்கொண்டே இருக்கலாம். ஆனால் இணையத்தில் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும். மோசடி வலைகளும் மால்வேர்களும் இணையத்தில் அதிகம் என்பது மட்டும் அல்ல, கண்ணால் காண்பதும் பொய் என உணர்த்தும் தருணங்களும் உண்டு.

இணையம் தகவல் சுரங்கம்தான். தேடு பொறிகள், கேட்ட தகவல்களைக் கொண்டு வந்து கொட்டுகின்றன. செய்திகளை தெரிந்து கொள்ள எண்ணற்ற தளங்கள் இருக்கின்றன. இவை தவிர ஃபேஸ்புக் வாயிலாகவும் குறும்பதிவு சேவையான ட்விட்டர் மூலமும் செய்திகள் வந்தடைகின்றன. திடீரெனப்பார்த்தால் வைரஸாகப்பரவி ஒரு விடயம் கவனத்தை ஈர்க்கும். அது அருமையான வீடியோவாக இருக்கலாம். நல்ல கட்டுரையாக இருக்கலாம்.

இப்படி இணையத்தில் நல்ல விடயங்கள் கண்ணில் பட்டுக்கொண்டே இருக்கின்றன. ஆனால் இவற்றுக்கு நடுவே இணையவாசிகள் கண்களில் மண்ணைத்தூவும் விடயங்களும் இணையத்தில் உலா வரவே செய்கின்றன. இதற்கு அப்டேட்டான உதாரணம் தேவை என்றால் ஈராக்கில் அண்மையில் நடைபெற்ற போரை சொல்லலாம்.







**பொய்ச்செய்திகளின் ஊற்றுக்கண் வெவ்வேறாக இருந்தாலும் அவை பரவிய விதம் ஒன்றாகவே இருக்கிறது. செய்தியைப் பகிர்ந்து கொள்ளும் ஆர்வம்தான் அது. ட்விட்டரில் ஒரு தகவலைப் பார்த்ததுமே அதை உடனே தனது நட்பு வட்டத்தில் பகிரும் ஆர்வத்துடன் பலரும் அதை மறு குறும்பதிவிடுகின்றனர். அதாவது ரி-ட்வீட் செய்கின்றனர். அதைப் பார்ப்பவர்கள் மேலும் ரி-ட்வீட் செய்ய பொய்ச்செய்தி வைரஸாகப் பரவுகிறது. பல நேரங்களில் ஊடகங்களேகூட இந்தத் தவறைச் செய்திருக்கின்றன.**

- சைபர் சிம்மன்

## நடக்காத யுத்தம்

இது நடைபெற்ற போர் அல்ல; நடைபெற்றதாக நம்ப வைக்கப்பட்ட போர். இஸ்லாமிக் ஸ்டேட் மற்றும் அதன் எதிர்ப்பாளர்கள் என இருதரப்பினரையும் ஏமாற வைத்த, ஆனால் உண்மையில் நிகழாத இந்தப் போர் பற்றி பிபிசி தளம் விரிவான செய்தி வெளியிட்டிருக்கிறது.

"லண்டன் மனிதர் ஒருவரால், சில குறும்பதிவுகளால் உண்டாக்கப்பட்ட போலி யுத்தம்...!" இப்படித் தான் பி.பி.சி. கட்டுரை துவங்குகிறது.

ஈராக்கில் ஐ.எஸ் தீவிரவாதிகளும் அரசுப் படைகள் மற்றும் ஆதரவுப் படைகள் மோதிக் கொண்டிருக்கின்றன அல்லவா! களத்தில் என்ன நடக்கிறது என்பது பற்றிய விவரங்கள் ட்விட்டரில் குறும்பதிவுகளாக வெளியாவதும் உண்டு. கள நிலவரத்தைக் கச்சிதமாக படம் பிடித்துக்காட்டும் டிவிட்டர் கணக்குகளும் இருக்கின்றன.

அதனால்தான் ஐ.எஸ் தீவிரவாதிகள் மற்றும் அரசுப் படைகள் இடையே ஏற்பட்ட சண்டை தொடர்பான தகவல் குறும்பதிவாக வெளியானபோது உடனடியாக கவனத்தை ஈர்த்தது.

ஈராக்கின் ஷிச்வா பகுதி மீண்டதைத் தொடர்ந்து பெரிய அளவில் கொண்டாட்டம் வெடித்ததாக குறும்பதிவு வெளியானது.

10,000 அகதிகள் ஷிச்வாவில் இருந்து கர்பாலாவில் தஞ்சம் அடைந்ததாக அடுத்த குறும்பதிவு தெரிவித்தது. அண்டை நாடுகளும் யுத்தத்தில் பங்கேற்பதாக வதந்திகள் உலா வருவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தன.

இன்னொரு குறும்பதிவோ ஈராக் எல்லையில் சவுதி படைகள் குவிக்கப்பட வேண்டும் என அலறியது.

## அலுப்பினால் ஆரம்பம்

மற்றவர்களுக்கு எப்படியோ ஈராக் நிலவரத்தை கவனித்து வருபவர்களை இந்தக் குறும்பதிவுகள் பரபரப்பில் ஆழ்த்தின. மேலும் என்ன நடக்கிறது என தெரிந்து கொள்ளத் துடித்தனர். ஆனால் இப்படி ஒரு சண்டை நடக்கவே இல்லை. இவை எல்லாமே லண்டனில் வசிக்கும் ஈராக்கியரான அகமது அல் முகமது என்பவர் மனத்தில் உதித்தவையாகும். முகமது, @Iraq-Surveys எனும் ட்விட்டர் பக்கத்தை பராமரித்து வருகிறார். பொதுவாக ஈராக்கில் நடக்கும் விஷயங்களை இணையத்தில் இருந்து திரட்டி தனது ட்விட்டர் பக்கத்தில் பகிர்ந்து கொள்வார்.

ஆனால் ஒரு நாள் மிகுந்த அலுப்புக்கு இலக்கான நிலையில், குறும்பதிவால் உற்சாகம் கொள்வதற்காக ஷிச்வா பகுதியில் ஐ.எஸ் பின்வாங்குகிறது என ஒரு செய்தியை ட்விட்டரில் வெளியிட்டார். இதற்குப் பொருத்தமாக போர்க்கள காட்சிகளையும் போட்டோஷொப் செய்து வெளியிட்டார்.

அவர் விளையாட்டாகத்தான் இவ்வாறு செய்தார். ஆனால் சற்றும் எதிர்பாராத வகையில் இந்தச் செய்தி இணையத்தில் உலா வரத் துவங்கியது. அதுவும் எப்படித்தெரியுமா? கண், காது, மூக்கு பொருத்தப்பட்டு! ஒரு பயனாளி இந்தப் போருக்கான வரைபடத்தை உருவாக்கி இணைத்திருந்தார். விளைவு, ஈராக்கில் இந்தச் செய்தி பரபரப்பாக பேசப்பட்டு சவுதி மீது ஐ.எஸ் பதிலடித் தாக்குதல் நடத்த துடிப்பதாகவும் பேசப்பட்டது.

## இல்லாத நகரம்

தனது விளையாட்டு விபரீதமாக மாறுவதை உணர்ந்த முகமது, இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் இந்தச் செய்தி பற்றிய உண்மையை வெளியிட்டார். ஆனால் ஏன் இப்படி ஒரு பொய்ச்செய்தியைப் பரப்ப முயல வேண்டும்? இந்தக் கேள்விக்கு முகமது, நான் என்ன செய்யட்டும்,ஷிச்வா எனும் இடமே கிடையாது, இந்தச் சொல்லுக்கு ஈராக் மொழியில் சீஸ் பிளேடர் என்று அர்த்தம். இதைப் பார்த்தவுடன் பொய் தகவல் என்பதை உணர்ந்து கொண்டிருக்க வேண்டாமா? என கேட்கிறார்.

ட்விட்டரில் இதற்கு முன்னரே இப்படி பல குளறுபடிகள் அரங்கேறி இருக்கின்றன. அதிலும் குறிப்பாக பிரபல நட்சத்திரங்கள் மரணம் அடைந்துவிட்டதாக ட்விட்டர் குறும்பதிவுகள் மூலம் பல முறை செய்தி பரவியிருக்கின்றன. ஒருமுறை ஹொலிவுட் நட்சத்திரம் ஆணோல்ட் ஸ்வாஸ்நேகர் பனிச்சறுக்கு விபத்தில் இறந்ததாக தகவல் வெளியாகி பரவி பின்னர் அடங்கியது. தென்னாபிரிக்க முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா மரணம் அடைந்துவிட்டதாகவும் அவர் உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டபோது பொய்த் தகவல் பரவியது. இப்படி பல உதாரணங்களைச் சொல்லலாம்.

## ரி-ட்வீட் செய்யும் முன்...

இந்தப் பொய்ச்செய்திகளின் ஊற்றுக்கண் வெவ்வேறாக இருந்தாலும் அவை பரவிய விதம் ஒன்றாகவே இருக்கிறது. செய்தியைப் பகிர்ந்து கொள்ளும் ஆர்வம்தான் அது. ட்விட்டரில் ஒரு தகவலைப் பார்த்ததுமே அதை உடனே தனது நட்பு வட்டத்தில் பகிரும் ஆர்வத்துடன் பலரும் அதை மறு குறும்பதிவிடுகின்றனர். அதாவது ரி-ட்வீட் செய்கின்றனர். அதைப் பார்ப்பவர்கள் மேலும் ரி-ட்வீட் செய்ய பொய்ச்செய்தி வைரஸாகப் பரவுகிறது. பல நேரங்களில் ஊடகங்களேகூட இந்தத் தவறைச் செய்திருக்கின்றன.

தகவல்களைப் பகிர்ந்து கொள்ளத் துடிப்பதில் தவறில்லைதான். ஆனால் ரி-ட்விட் செய்யும் முன் ஒரு நொடி அந்தச் செய்தி உண்மையா என யோசித்தால்கூட போதும், இத்தகைய பல விபரீதங்களை தவிர்த்துவிடலாம். பிரபலங்கள் பற்றிய தகவல் என்றால் அவர்களின் அதிகாரபூர்வ ட்விட்டர் பக்கம் அல்லது இணையத்தளத்தில் அந்தத் தகவல் இடம்பெற்றிருக்கிறதா என்று பார்த்துக்கொள்ளலாம். அதே போல பிரபலங்கள் பெயரில் ஒரு தகவல் வெளியானால் அது அவருடைய அதிகாரபூர்வ பக்கம் தானா என உறுதி செய்து கொள்ள வேண்டும். மிகவும் முக்கியமான தகவல் மற்றும் விநோதமான செய்தி என்றால் நிச்சயம் அவற்றைச் சரி பார்க்க முயல வேண்டும். மாறாக ஆர்வத்தில் அதை ஃபேஸ்புக்கிலோ ட்விட்டரிலோ பகிர்ந்து கொண்டால் பொய்ச்செய்திக்கு எடை கூட நாமும் காரணமாகி விடுவோம்.

எல்லாவற்றுக்கும் மேல் இணையத்தில் காணும் எல்லாம் உண்மை எனும் எண்ணத்தை முதலில் மாற்றிக்கொள்ள வேண்டும். எந்தச் செய்தியாக அல்லது தகவலாக இருந்தாலும் அது வெளியான மூல இடம் நம்பகமானதா என பார்க்க வேண்டும்.

## ஒனியன் அறிவோம்

இவை தவிர இணையத்தில் செயல்படும் முக்கிய தளங்களின் தன்மையை அறிந்து கொள்ள வேண்டும். உதாரணத்துக்கு ஒனியன் எனும் இணையத் தளம் கேலி மற்றும் நையாண்டியாக செய்திக் கட்டுரைக்ளை வெளியிடுவதற்கு பெயர் பெற்ற தளம். இது வெளியிடும் செய்திக் கட்டுரைகள் உண்மை போலவே இருக்கும். ஆனால் உண்மை இல்லை. கேலி மற்றும் நகைச்சுவையை விமர்சன நோக்கில் அருமையாகப் பயன்படுத்தும் இணையத்தளம் இது.

ஒனியன் பற்றி அறியாதவர்கள் அதில் வெளியாகும் கட்டுரையைப் படித்து உண்மை என நினைத்து விட்டால் விபரீதம்தான். அண்மையில் முன்னாள் பிஃபா நிர்வாகிகள் கால்பந்து சம்மேளன ஊழல் விவகாரத்தில் ஒனியன் கட்டுரையை மேற்கோள் காட்டி அசடு வழிந்தனர்.

இந்தியாவில் கூட FirstPost செய்தி தளத்தில் போலி செய்திகளுக்கு என்று ஒரு பகுதி இருக்கிறது. அதில் வெளியாகும் தலைப்புகள் முதல் பார்வையில் நெஞ்சை படபடக்க வைத்துவிடும்.

இது போன்ற இணையத்தளங்களை அறிந்து வைத்திருக்க வேண்டும். இந்தச் செய்திகளை படித்து ரசிக்க வேண்டுமே தவிர நம்பி ஏமாறக்கூடாது. ஒரு கட்டுரையைப் படித்த பின் அதன் தன்மை பற்றி உறுதி செய்து கொள்ள வேண்டும் என தோன்றினால் அந்தத் தளத்தின் அறிமுகக் குறிப்பின் பகுதியை படித்துப் பார்த்தால் அதன் தன்மை மற்றும் நோக்கம் பற்றி தெரிந்து கொள்ளலாம்.

## எச்சரிக்கை தேவை

நிற்க, இது போன்ற ஏமாற்று முயற்சிகளுக்கு இணையத்திலேயே மாற்று மருந்துகளும் இருக்கவே செய்கின்றன.

நோயுவர் மெமே (http://knowyourmeme.com/) எனும் இணையத்தளம் ஒன்று இருக்கிறது. இணையத்தில் வைரஸாக பரவும் நிகழ்வுகளின் பின்னே உள்ள உண்மை மற்றும் அவை எப்படிப் பரவி பிரபலமாயின என்பதை விளக்கும் தளமாக இருக்கிறது. அதேபோல ஸ்னோப்ஸ்.கொம் (http://www.snopes.com/) மற்றும் ஸ்மோகிங்கன் (http://www.thesmokinggun.com/) ஆகிய தளங்கள் பொய்ச்செய்திகளுக்கான விளக்கங்களை அளிக்கின்றன.

# மகிந்த வந்தால் அழிவு தான் மிஞ்சும்



மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஆட்சிக்கு வந்தால் நாட்டை சீரழித்து விடுவார் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அகலவத்தையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் உரையாற்றுகையில், மகிந்த ராஜபக்ஷ நாட்டை சீரழித்ததன் பின்னர், . ஒன்றிணைந்த போராட்டத்தின் மூலம் நாட்டை மாற்றியமைக்க முடிந்ததாகவும் கட்சியில் ஒரு பகுதியை உடைத்துக் கொண்டு மீண்டும் மகிந்த ராஜபக்ஷ தேர்தலுக்கு வந்துள்ளார் எனவும் சந்திரிக்கா பண்டாரநாயக்க குறிப்பிட்டார்.

மேலும் மகிந்த ராஜபக்ஷவின் இத்தகைய முயற்சியை தோல்வியடையச் செய்ய வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# மீண்டும் வாய்ப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு கடந்த வாரம் 3 மற்றும் 5ஆம், 6ஆம் திகதிகளில் இடம் பெற்றது.

இந்தநிலையில் தபால் மூலம் வாக்களிக்கத் தவறியவர்கள் எதிர்வரும் 11ஆம் திகதி வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

இம்முறை தபால் மூல வாக்களிப்பு நடவடிக்கைகள் இரண்டு கட்டமாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதன்படி 3ஆம் திகதி ஆசிரியர்கள் மற்றும் பொலிஸ் திணைக்களத்தினரும் 5ஆம் மற்றும் 6ஆம் திகதிகளில் ஏனைய அரச உத்தியோகத்தர்களும் வாக்களித் திருந்தனர்.

# படையினருக்கு தடை



(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு, இராணுவத்தினர் எவரும் அரசியல் நடவடிக்கையில் ஈடுபடக் கூடாதென, இராணுவத் தலைமையகம் உத்தரவிட்டுள்ளது.

அவ்வாறு அரசியல் நடவடிக்கையில் ஈடுபடும் இராணுவத்தினர் தொடர்பில் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென, இராணுவத் தளபதி லெப்டினன்ட் கிரிஷாந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ காலத்தில் இராணுவத்தினரை பல குற்றச் செயல்களுக்கு பயன்படுத்தியதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்களையடுத்தே, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எந்தவொரு வடிவிலான தேர்தல் பரப்புரைகளிலும், இராணுவத்தில் உள்ள எந்தவொரு நிலையில் உள்ள அதிகாரியோ, சிப்பாயோ ஈடுபடக் கூடாதென்றும் தொண்டர் படையில் உள்ளவர்களுக்கும் இந்த உத்தரவு பொருந்தும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் இராணுவக் குடும்பங்களின் வாக்குளை பெறுவதில் இரு பிரதான கட்சிகளும் மும்முரமாக ஈடுபட்டுள்ளன.

இந்நிலையில், இராணுவத்தினரை கடுமையாக விமர்சித்த, யுத்தக் குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணைக்கு உட்படுத்த முயலும் ஐ.தே.க அரசாங்கத்திற்கு வாக்களிக்க கூடாதெனவும், தேர்தலில் போட்டியிடும் இராணுவத்தினர் விலகிக்கொள்ள வேண்டுமெனவும் அண்மையில் தாய்நாட்டிற்கான இராணுவம் அமைப்பு தெரிவித்திருந்தமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

# தனியாக வேண்டும்



பெற்றோரின் கடவுச்சீட்டுகளில் பெயர் சேர்க்கப்பட்டிருந்தாலும், 16 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு தனியான கடவுச்சீட்டு பெற வேண்டும் என்ற கட்டாய நடைமுறை இன்று முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதுதொடர்பாக தகவல் வெளியிட்டுள்ள சிறிலங்காவின் பொது சட்டம் ஒழுங்கு இந்து அமைச்சின் செயலர் தென்னக்கோன்,

பெற்றோரின் கடவுச்சீட்டுகளில் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ளும் தற்போதைய நடைமுறையினால், சிறுவர்களைக் கண்டு பிடிப்பதில் சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இன்று முதல் விநியோகிக்கப்படவுள்ள, பயோமெட்ரிக் கடவுச் சீட்டுகளில் பத்து விரல்களின் ரேகை அடையாளங்களும் பதிவு செய்யப்படும் என்பதால், ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கடவுச் சீட்டுகளை பெற முடியாது.

16 வயதுக்கு மேற்பட்டவர்களின் பயோமெட்ரிக் தகவல்கள் கடவுச்சீட்டுகளில் உள்ளடக்கப்படும்.

கடவுச்சீட்டுக்கு பயன்படுத்தப்படும் படம் அனைத்துலக தரம் வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்பதால், தெரிவு செய்யப்பட்ட சில ஒளிப்படப்பிடிப்பாளர்களுக்கு மட்டும் அனுமதி அளிக்கப்படும்.

புதிய கடவுச்சீட்டு குற்றங்களைத் தடுக்கவும், நாட்டை விட்டு வெளியேறும், உள்வரும் நபர்களை கண்காணிக்கவும் உதவியாக இருக்கும்.

இந்த பயோமெட்ரிக் கடவுச்சீட்டுத் திட்டத்துக்கு அவுஸ்ரேலியா நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015
( தேர்தல் மாவட்டம் வன்னி )



அன்ரனி அருள்ராஜசேகர்
(சாந்தன்)
மாவட்ட இணைப்பாளர் வவுனியா



ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# தெற்கில் துப்பாக்கிச்சூடு சூத்திரதாரிகள் வடக்கில்

(கொழும்பு)

கொழும்பு புளூமெண்டல் பகுதியில் கடந்த மாதம் 31ஆம் திகதி நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க கலந்து கொண்ட தேர்தல் பிரசார பேரணி மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் யாழ்ப்பாணத்துக்கு தப்பி வந்துள்ளதாக யாழ்ப்பாண பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தப்பி வந்த சந்தேக நபர்கள் நால்வரும காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்துக்குட்பட்ட வடமராட்சி கடல் மார்க்கமாக இந்தியாவுக்கு தப்பிச் செல்ல முற்பட்டுள்ளதாக அத்தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. தற்போது, மாதகல் கடற் பகுதியிலிருந்து வடமராட்சி கிழக்கு பகுதி வரையான கடலோர மார்க்கங்களில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளதுடன், பொலிஸார் வீதித்தடைகளை ஏற்படுத்தி சந்தேகத்துக்கிடமான வாகனங்களை சோதனை செய்து வருகின்றனர். மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களில் சிங்களவர்கள் மூவருடன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழர் ஒருவரும் அடங்குகின்றார். செல்வராஜ் கணேசன் (வயது 30), ஆர்.எஸ்.எஸ். சுமர ஹெவத் ஆமி ரனபாத் (வயது 35) ஆர்.ஏ.எஸ்.சீ.செவட்ட சேவத் ஹேவத் புளூமென்ரல் (வயது 37) கே.என்.அன்சன பெற்றும் ஹேவத் உக்குன் ஆகியோரே சந்தேக நபர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். கொழும்பு கொட்டாஞ்சேனை புளூமெண்டல் பகுதியில் தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட வேட்பாளரும் நிதியமைச்சருமான ரவி கருணாநாயக்க தனது தேர்தல் காரியாலயத்தை திறந்து பிரசார பணி மேற்கொள்ள கொட்டாஞ்சேனை நோக்கி பேரணியாக சென்று கொண்டிருந்தனர். இதன் போது துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றிருந்தது. இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட கொழும்பு குற்றத்தடுப்பு பொலிஸார் சம்பவம் இடம்பெற்ற இடத்திலிருந்து சந்தேக நபர்கள் விட்டு சென்ற தடயப் பொருட்களை மீட்டதுடன், அவர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்

# இணைந்து பணியாற்ற தயார்



(கொழும்பு)

இலங்கையில் இடம் பெற்றதாகக் கூறப்படும் யுத்தக் குற்றம் தொடர்பில் தமது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டுமெனவும், அதற்காக இலங்கை அரசாங்கத்துடன் பணியாற்ற தயாரெனவும், சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் தலைவி யஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

அத்துடன், யுத்தக் குற்றம் மற்றும் மனித உரிமை மீறல் தொடர்பில் தம்மிடம் உளள ஆதாரங்களை பகிர்ந்து கொள்ளத் தயாரெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் இதனை இலங்கை அரசாங்கம் எவ்வாறு கையாளப்போகின்றது என்பது பற்றி இதுவரை எவ்வித தகவலும் வெளியாகவில்லை.

இலங்கையில், கடத்தப்பட்டோர் மற்றும் காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை நடத்தி நீதியை நிலைநாட்ட, பொறுப்புள்ளவர்கள் தவறியுள்ளதாக யஸ்மின் சூக்கா ஏற்கனவே குற்றஞ்சுமததியிருந்தார்.

அத்துடன், காணாமற போதல தொடர்பான சர்வதேச உடன்படிக்கையில் கையெழுத்திடுமாறு, உண்மை மற்றும் நீதிக்கான அமைப்பு இலங்கைக்கு அழைப்பு விடுத்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## முரசின் இன்றைய பலன்

10.08.2015 திங்கட்கிழமை

மன்மத வருஷம் ஆடி மாதம் 25 ஆம் திகதி.
அமிர்தசித்த யோகம் /ஏகாதசி திதி
மிருகசீரிட நட்சத்திரம் முன்இரவு - 10.17 வரை பின் திருவாதிரை
இராகுகாலம் 7:34 - 9.04 வரை சுப நேரம் 12.04 - 1.34 வரை



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** — கிரக பாவம் அதி உச்சத்தில் இருப்பதினால் வரன் தேடி அலைதல்

**ரிஷபம்** — பிரயாணத்தின் போது ஆவணங்கள் தவறிப்போகும் அபாயமேற்படல்

**மிதுனம்** — தெய்வ தலங்களுக்கு குடும்ப சகிதம் விஜயம் மேற்கொள்ளல்

**கடகம்** — நோயினால் பணியில் நின்று ஓய்வு பெற விண்ணப்பித்தல்

**சிம்மம்** — வெளியூர் பயணம் மேற் கொள்ள பாடசாலைக்கு முற்றுப் புள்ளி வைத்தல்

**கன்னி** — பார்க் லைட் எரிய விடாமை யினால் விபத்து ஏற்படல்

**துலாம்** — நிறைகுறைவாக இருந்தமை யினால் களேபரம் ஏற்படல்

**விருச்சிகம்** — கடனாகக் கொடுத்த பணத்தி னைக கேட்கச் சென்றவேளை முரண்பாடு ஏற்படல்

**தனுசு** — ஈகோ மனப்பாங்கினைக் கை விட்டதால் கவின் நிலை மகிழ் வினைத் தரல்

**மகரம்** — மின் ஒழுக்கில் கவனம் எடுப்பதன் மூலம் பாரிய சேதம் ஏற்படுவதைத் தவிர்த்தல்

**கும்பம்** — இழுத்து மூடிய வியாபார நிலையத்தை மீண்டும் இயங்க வைததல்

**மீனம்** — சத்திரசிகிச்சையின் பொருட்டு தம்பதியர் சகிதம் தமிழ்நாடு செல்லல்

# யாழ்.மாவட்ட செயலகத்திடம் உதவிப் பொதிகள் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயமான இந் நிறுவனம் உலகளாவிய ரீதியில் யுத்தம் மற்றும் அசாதாரண சூழ் நிலைகளால் பாதிப்பு மற்றும் நெருக்கடிகளுக்கு உள்ளானவர்களுக்கான உதவிகளைச் செய்து வருகின்றது. அதன் ஒரு கட்டமாக,

பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் பல்வேறுபட்ட அடக்குமுறைகளுக்கும் துன்புறுத்தல்களுக்கும் உள்ளாகி வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்படும் பெண்களிற்கு உதவி வழங்கும் நோக்கில் ஒரு தொகை அவசர உதவிப் பொதிகளை UNHCR நிறுவனம் யாழ்மாவட்ட செயலகத்திடம் கையளித்துள்ளது.

வீடுகளில் துன்புறுதல், முறையற்ற குழந்தை பிரசவம், பாலியல் துன்புறுத்தல் போன்றவற்றால் பாதிக்கப்பட்டு வைத்திய சாலைகளில் சிகிச்சைக்கென அனுமதிக்கப்படும் பெண்களிற்கு தேவையான அடிப்படை பொருட்களடங்கிய அவசர பொதிகளை வழங்க UNHCR நிறுவனம் முன்வந்துள்ளது.

இதன் முதற்கட்டமாக ஒவ்வொரு பொதியும் 2000 ரூபா பெறுமதியான பொருட்கள் அடங்கிய 75 பொதிகள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகனிடம் அண்மையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்படும் மேற்குறிப்பிட்டவாறான உதவிகளற்ற நோயாளிகள் வைத்திய சாலையிலுள்ள பாலியல் சார்ந்த வன்முறைகள் தடுப்புக் குழுவினரால் இனங்காணப்பட்டு இப் பொருட்கள் அவர்களுக்கு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சட்டவிரோத மீன்பிடி; இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

டைனமைட் பாவித்து பிடிக்கப்பட்ட 82 கிலோ மீன் மற்றும் 200 கிராம் டைனமைட் மருந்து, உட்பட மீனவர்கள் இருவரையும் யாழ்பொலிஸார் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை கைது செய்துள்ளனர்.

யாழ்.குருநகர் பகுதியில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் குருநகர் கடற்கரையில் குறித்த இடத்தை சுற்றிவளைத்துள்ளனர்.

குறித்த மீனவர்கள் பயன்படுத்திய மீன்பிடி உபகரணங்களை யாழ்.பொலிஸார் பொலிஸ் நிலையத்தில் வைத்திருப்பதுடன், குறித்த இரு மீனவர்களையும் யாழ்.நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கையினையும் மேற்கொண்டு வருகின்றனர்.

(25)

# யாழின் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தினூடாக யாழ். மாவட்டத்தின் அபிவிருத்திக்கு 23.35 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றுள்ளதென யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் மாவட்டத்தின் சகல பகுதிகளிலும் 1032 வாழ்வாதார அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. விவசாயம், மீன்பிடி, கால்நடை, சந்தைப்படுத்தல் மற்றும் கைத்தொழில் ஆகிய பிரிவுகளின் கீழ் தெரிவு செய்யப்படும் பயனாளிகளுக்கு 75,000ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

மேலும் மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலகங்களினூடாகவும் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் இச்செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மன்னார் ஆயரின் சிகிச்சைக்கு நிதி சேகரிப்பு ஆரம்பம்

## மனித மாண்பினைக் காக்கும் அமைப்பு வேண்டுகோள்



(மன்னார்)

மன்னார் மறை மாவட்ட ஆயர் அதி வணக்கத்திற்குரிய இராயப்பு ஜோசப் மேலதிக சிகிச்சைக்காக சிங்கப்பூரிற்கு பயணமாகிறார். அங்கு 6 வாரங்கள் தங்கியிருந்து மருத்துவ சிகிச்சையினை மேற்கொள்ளவுள்ளார். எனவே அதற்குத் தேவையான செலவுகளை மேற்கொள்வதற்கு புலம் பெயர் உறவுகள் மற்றும் மக்களாகிய நாம் நிதி சேகரிப்பு உதவியினை மேற்கொண்டு எமது ஆயரை பூரண சுகத்துடன் வரவேற்கவேண்டும் என்று மனித மாண்பினைக்காக்கும் அமைப்பின் பணிப்பாளர் திருமதி நாளினி கிஷோகுமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

எமது நாட்டில் இடம்பெற்ற கொடிய யுத்தம் நிறைவுக்கு வந்ததையடுத்து நாம் நிம்மதியுடன் வாழ்ந்து வருகின்றோம். இவ் யுத்தம் காரணமாக நாம் பலரை இழந்துள்ளோம். பலர் காணாமற்போயுள்ளனர். பலர் அனாதைகளானார்கள். யுத்தம் இடம்பெற்ற காலத்திலும் பலர் காணாமற்போன நேரத்திலும் மன்னார் மறை மாவட்ட ஆயர் ஆற்றிய பணியினை நாம் மறந்து விட முடியாது. யுத்தத்தினை நிறுத்த ஆயர் மேற்கொண்ட அர்ப்பணிப்பு, தியாகம் யுத்த பிரதேசத்திலிருந்த மக்களுக்கு மட்டுமே தெரிந்த விடயம்.

சிவில் அமைப்புக்கள், காணாமற்போனோரைக் கண்டறியும் அமைப்பு என பல அமைப்புகளுக்கு தலைமை தாங்கியதுடன் ஆலோசனைகளையும் வழங்கியிருந்தார். வெள்ளை ஆடை அணிந்த பிதாமகன் என்றே கூற வேண்டும். தமிழ்த் தேசியம் சிதைந்து விடாமல் பாதுகாத்ததையும் நாம் மறந்து விட முடியாது.

அவரின் செயற்பாடுகள், எமது சமூகத்தினை மட்டுமல்ல எமது நாட்டையே பாதுகாத்துள்ளது. வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் உட்பட அயல் நாட்டின் அரசியல் தலைமைகள் வரை ஆயரின் ஆளுமையை அறிந்துள்ளார்கள்.

எனவே ஆயரின் அவர்களின் சிகிச்சைக்கான நிதியினை நாம் அனைவரும் இணைந்து நிதி சேகரிப்பினை மேற்கொண்டு ஆயர் விரைவில் சுகமடையவும் பிரார்த்தனை செய்வதுடன் மன்னார் ஆயர் இல்லம் மறை மாவட்ட குருமுதல்வர் அருட்பணி விக்ரர் சோசையுடன் 0775009440 தொலைபேசி இலக்கத்துடன் இணைந்து நிதி சேகரிப்புக்களை மேற்கொள்ளுமாறு மனித மாண்பினைக் காக்கும் அமைப்பு சார்பாக அதன் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015
(தேர்தல் மாவட்டம் – வன்னி)

அ.ஜெயராஜ்
2
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# ஆஷஸ் தோல்வியின் எதிரொலி; விடைபெறுகிறார் ஆஸி. கப்டன்

## இங்கிலாந்து வசம் தொடர்



(நொட்டிங்கொம்)

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான 4ஆவது டெஸ்டில் இங்கிலாந்து அணி இனிங்ஸ் வெற்றி பெற்றதுடன், ஆஷஸ் தொடரையும் 3-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி, இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. முதலாவது மற்றும் 3ஆவது டெஸ்டில் இங்கிலாந்தும், 2ஆவது டெஸ்டில் அவுஸ்ரேலியாவும் வெற்றி பெற்றன.

இந்த நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான 4ஆவது டெஸ்ட் கடந்த 6ஆம் திகதி நொட்டிங்கொமில் ஆரம்பமானது. கட்டாயம் வென்றாக வேண்டிய நெருக்கடியுடன் களம் இறங்கிய அவுஸ்ரேலியா முதல் இனிங்ஸில் வெறும் 60 ஓட்டங்களில் சுருண்டது. பின்னர் தனது முதல் இனிங்ஸை ஆடிய இங்கிலாந்து அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 391 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டத்தை நிறுத்தியது.

331 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இனிங்ஸிற்காக ஆடிய அவுஸ்ரேலிய அணி 2ஆவது நாள் முடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 241 ஓட்டங்களுடன் தோல்வியின் விளிம்பில் பரிதவித்தது.

இந்த நிலையில் எதிர்பார்த்தது போலவே அவுஸ்ரேலியாவின் கதை 3ஆவது நாளில் சிறிது நேரத்தில் முடிவுக்கு வந்தது. இறுதியில் 2ஆவது இனிங்ஸிற்காக ஆடிய அவுஸ்ரேலிய அணி 72.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 253 ஓட்டகளைப்பெற்றது. இதில் வோக்ஸ் 51 மற்றும் வோர்னர், ரோஜர்ஸ் ஆகியோர் அரைச்சதம் கடந்தனர். பந்து வீச்சில் பென் ஸ்டோக்ஸ் 6, மார்க்வுட் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இதன் மூலம் இங்கிலாந்து அணி இனிங்ஸ் மற்றும் 78 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இமாலய வெற்றியை ருசித்தது.

இந்த வெற்றியையடுத்து இங்கிலாந்து அணி ஆஷஸ் கோப்பையை 3-1 என்ற கணக்கில் கைப்பற்றியது. முதல் இனிங்ஸில் 8 விக்கெட்டுகளை அள்ளிய இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் புரொட் ஆட்டநாயகனாக தேர்வு செய்யப்பட்டார்.

ஆஷஸ் தோல்வி எதிரொலியாக, டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக மைக்கல் கிளார்க் அறிவித்துள்ளார்.

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் டெஸ்ட் கப்டன் மைக்கல் கிளார்க், ஓட்டங்கள் குவிக்க முடியாமல் திணறி வருகிறார். கடைசி 12 இனிங்ஸில் அவர் ஒரு அரைச்சதம் கூட அடிக்கவில்லை. தற்போதைய ஆஷஸ் தொடரில் 8 இனிங்ஸில் விளையாடி வெறும் 117 ஓட்டங்கள் மட்டுமே (சராசரி 16.71) எடுத்துள்ளார். இங்கிலாந்து மண்ணில் அடிமேல் அடி விழுந்து வருவதால் கிளார்க் நொந்து போய்விட்டார்.

4ஆவது டெஸ்டுக்கு முன்பாக பேட்டி அளித்த கிளார்க், ஆஷஸ் தொடருக்கு பின்னரும் தொடர்ந்து கிரிக்கெட் ஆடுவேன் என்று பிடிவாதமாக கூறினார். ஆனால் இந்த டெஸ்டிலும் ஒட்டுமொத்தமாக சொதப்பிவிட்டார். தவிர, ஆஷஸ் கடைசி டெஸ்டுக்கு பின் அணியில் அவருக்கு இடம் கிடைக்காது என்று அவுஸ்ரேலிய அணி நிர்வாகம் அவருக்கு ஏற்கனவே தகவல் அனுப்பியதால் மேலும் நெருக்கடிக்குள்ளானார்.

இந்த நிலையில் ஆஷஸ் தொடருடன் அவர் சர்வதேச டெஸ்ட் அரங்கில் இருந்து ஓய்வு பெற முடிவு செய்திருக்கிறார். இதனை அவரே நேற்று முன்தினம் தெரிவித்தார்.

4ஆவது டெஸ்ட் தோல்விக்குப் பின் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் கிளார்க் அளித்த பேட்டி வருமாறு:-



இன்னும் ஒரு டெஸ்ட் போட்டி மட்டுமே விளையாட இருக்கிறேன். அதன் பின் எனது சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கை நிறைவு பெறுகிறது. தொடரின் பாதியிலேயே விலகி ஓட விரும்பவில்லை. அதனால் தான் இங்கிலாந்துக்கு எதிரான கடைசி டெஸ்டில் ஆடுகிறேன்.

இந்தத் தொடர் மட்டுமல்ல, கடந்த 12 மாதங்களாக எனது செயற்பாடு ஏற்றுக்கொள்ளும் வகையில் இல்லை. எப்போதும் அணியை முன்னெடுத்து செல்ல வேண்டும் என்பதே எனது நோக்கம். அதை செய்ய முடியாததால் மிகுந்த ஏமாற்றத்திற்குள்ளாகி இருக்கிறேன்.

மிகப்பெரிய தொடர்கள் வரும்போது, அதில் எம்மை மேலும் வலுப்படுத்திக்கொள்ள வேண்டும். குறிப்பாக ஒரு நாள் கிரிக்கெட் என்றால் உலக கோப்பை, டெஸ்ட் கிரிக்கெட் என்றால் ஆஷஸ் போட்டிகளில் அசத்த வேண்டும்.

நடப்பு ஆஷஸ் தொடரில் என்னால் முடிந்தவரை முயற்சித்தேன். சக வீரர்களும் தங்களது முழுத் திறமையை வெளிக்காட்ட முயற்சித்தனர். ஆனால் முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டு விட்டோம். இனி அடுத்த தலைமுறை வீரர்கள், அடுத்த கப்டன் இதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கும், தயாராவதற்கும் வாய்ப்பு அளிக்க வேண்டிய நேரம் இது.

ஓய்வு முடிவை நேற்றிரவு (நேற்று முன்தினம்) எடுத்தேன். எனது முடிவை அறிந்து சக வீரர்கள் ஆச்சரியமடைந்தனர். இந்த நேரத்தில் நான் விலகுவேன் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை. கிரிக்கெட் எனக்கு எந்த வித்த்திலும் கடன்படவில்லை. கிரிக்கெட்டுக்காக நான் தான் கடன்பட்டுள்ளேன். இவ்வளவு காலம் விளையாடியதற்காக கிரிக்கெட்டுக்கு என்றும் நன்றி உடையவனாக இருப்பேன். மறக்க முடியாத பசுமையான நினைவுகளை எடுத்துச்செல்வேன்.

அவுஸ்ரேலிய அணிக்காக 100 டெஸ்ட்களுக்கு மேல் விளையாடியது நான் செய்த அதிர்ஷ்டம். வருங்காலத்தில் வர்ணனையாளர் பணியை செய்வேன் என்று நம்புகிறேன். அவுஸ்ரேலிய அணியில் திறமையான வீரர்கள் நிறைய பேர் உள்ளனர். இவர்களால் சரிவில் இருந்து மீள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

ஏற்கனவே ஒரு நாள் கிரிக்கெட்டில் இருந்து விடைபெற்று விட்ட கிளார்க் இதுவரை 114 டெஸ்ட்களில் விளையாடி 28 சதம் உட்பட 8,628 ஓட்டங்கள் எடுத்துள்ளார். அவருக்கு பதிலாக ஸ்ரீபன் ஸ்மித் புதிய கப்டனாக நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## நம்ப முடியவில்லை



அவுஸ்ரேலிய அணிக்கெதிரான ஆஷஸ் தொடரை வென்றதை இன்னும் என்னால் நம்ப முடியவில்லை. இது ஒரு மகத்தான சாதனை. ஏனெனில் 18 மாத கால இடைவெளியில் எழுச்சி பெற்றிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது என இங்கிலாந்து அணிக் கப்டன் குக் தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான ஆஷஸ் தொடரின் நான்காவது போட்டியில் இனிங்ஸ் வெற்றிபெற்றதுடன் தொடரையும் கைப்பற்றிக் கொண்டமை குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே குக் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இச்சாதனையை என்னால் நம்ப முடியவில்லை. 18 மாதங்களுக்கு முன்பு 0-5 என்ற கணக்கில் ஆஷஸ் தொடரில் தோற்ற நிலையில் அத்தகைய நிலைமையை மாற்றி இந்த நிலைக்கு வந்திருப்பது பெருமிதம் அளிக்கிறது. இதற்கு வீரர்களின் ஒருங்கிணைந்த செயற்பாடே காரணம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, ஆஷஸ் தொடரின் இறுதி டெஸ்ட் போட்டி எதிர்வரும் 20ஆம் திகதி லண்டன் ஓவலில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பொண்டிங் சீற்றம்

வீரர்களின் பொறுப்பற்ற ஆட்டமே ஆஷஸ் தொடரை ஆஸி. இழக்கக் காரணம் என அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் கப்டன் பொண்டிங் தெரிவித்துள்ளார்.

ஆஷஸ் சுற்றுப் பயணத்தில் ஆடுகிற 8 வீரர்கள் இனி டெஸ்ட் போட்டியில் விளையாட வாய்ப்பில்லாமல் போகலாம். இது பெரிய அதிர்ச்சி. உண்மை என்னவென்றால் அவுஸ்ரேலியா 60 ஓட்டங்களில் ஆட்டமிழந்த ஆடுகளத்தில் இங்கிலாந்து 391 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை நிறுத்தியது. இது எங்கள் வீரர்கள் ஆடுகளத்தின் தன்மையைப் புரிந்து கொண்டு செயற்படவில்லை என்றே பொருள். பந்து வீச்சாளர்கள் எவரும் பிரகாசிக்கவில்லை. இரண்டாவது இனிங்ஸிலும் சொதப்பிவிட்டனர். அணியை சரிவிலிருந்து முதலில் மீட்கவேண்டும். இதற்கு கிரிக்கெட் சபை அதிரடியான நடவடிக்கைகளை மேற்கொள்ள தயாராக வேண்டும். ஆடுகளத்தில் சிறந்த முறையில் பயன்படுத்திய இங்கிலாந்து தொடரை இலகுவாக வென்றுவிட்டது. என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## குக்கிற்கு மேலுமொரு மகுடம்

(லண்டன்)

இங்கிலாந்து அணி வெற்றி பெற்ற 50 போட்டிகளில் பங்கேற்ற முதல் வீரர் என்ற சிறப்பை இங்கிலாந்து அணிக் கப்டன் குக் பெற்றுள்ளார்.

இங்கிலாந்து அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரரும் மற்றும் கப்டனாக இருந்து வருபவருமான குக் (வயது- 30) கடந்த 2006ஆம் ஆண்டு இந்தியாவிற்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அறிமுகமானார். இதுவரை இங்கிலாந்து அணிக்காக 118 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார்.

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான நான்காவது போட்டியில் இங்கிலாந்து அணி இனிங்ஸ் வெற்றிபெற்றது. இதன் மூலம் இங்கிலாந்து அணி வெற்றி பெற்ற 50 போட்டிகளில் பங்கேற்ற முதல் வீரர் என்ற பெருமையை குக் பெற்றுள்ளார். டெஸ்ட் போட்டிகளில் குக் 27 சதங்கள், 43 அரைச்சதமும் அடித்துள்ளார். 9223 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

அவரைத் தொடர்ந்து, அண்டர்சன் 49 போட்டிகளிலும், இயன் பெல் 43 போட்டிகளிலும், ஸ்டார்ஸ் 47 போட்டிகளிலும், கோலின் கவுட்ரே 43 போட்டிகளிலும் பங்கேற்று அடுத்தடுத்த இடங்களில் உள்ளனர்.

## பிரேசில் ஒலிம்பிக்கிலும் ஜொலிப்பேன்



பிரேசில் ரியோ டி ஜெனிரோவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் என்னால் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. நிச்சயமாக 100, 200 மீற்றர் போட்டிகளில் என்னால் தங்கம் வெல்ல முடியும் என உலகின் அதி வேகமான மனிதர் என வர்ணிக்கப்படும் ஜமேக்காவின் உசைன் போல் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு பிரேசிலில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிக்கான நுழைவுச் சீட்டுக்கள் தற்போது பரபரப்பாக விற்பனை செய்யப்பட்டு வரும் நிலையில் விளம்பர நிகழ்ச்சி ஒன்றில் பங்கு கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலே உசைன் போல் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், எனது உடற்தகுதி குறித்து பலர் சந்தேகம் தெரிவித்து வருகின்றனர். என்னைப் பொறுத்த வரை ரியோ டி ஜெனிரோ ஒலிம்பிக்கில் சிறப்பாக செயற்பட முடியும் என நம்புகின்றேன். எனக்கு இறுதி ஒலிம்பிக்காக இது அமையவுள்ளதால் நிச்சயம் 2 அல்லது 3 தங்கப் பதக்கத்தையாவது வெல்வேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015
(தேர்தல் மாவட்டம் - வன்னி)

அந்தோனிமுத்து அனஸ்ரின்


ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# ராஜீவ்குமார், எடின் அதிரடி ஆட்டம்

## சென்றல், சென்றலைட்ஸ் அணிகள் வெற்றி

(யாழ்ப்பாணம்)

ராஜீவ்குமார், எட்வேட் எடின் ஆகியோரின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் யாழ். சென்றல் மற்றும் யாழ். சென்றலைட்ஸ் அணிகள் இலகுவான வெற்றிபெற்றன.

யாழ்ப்பாண பிறிமியர் லீக் என அழைக்கப்படும் ஜே.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடர் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெற்று வருகின்றது.

மூன்றாவது ஆண்டாக நடாத்தப்பட்டு வரும் இப்போட்டித் தொடரின் முதல் சுற்று ஆட்டங்கள் லீக் முறையில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் மூன்று போட்டிகள் நடைபெற்றன.

முதல் போட்டியில் தெல்லிப்பளை கிறார்ஸ் ஹோப்பர்ஸ் அணியும் யாழ். சென்றலைட்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கிறார்ஸ் ஹோப்பர்ஸ் அணி அதிரடியாக ஆடி வேகமாக ஓட்டங்களைச் சேர்க்க முற்பட்டபோதிலும் யாழ். சென்றலைட்ஸ் அணியின் இறுக்கான கள வியூகத்திற்கு மத்தியில் அதனால் பெரியளவில் ஓட்டங்களைக் குவிக்க முடியவில்லை. நிறைவில் கிறார்ஸ் ஹோப்பர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 123 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அஜித். 22, ராஜகாந்தன் 23, கபிலன் 26, டிலோசன் 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கோகுலன் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 124 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென்றலைட்ஸ் அணி எட்வேட் எடினின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் இலகுவாக வெற்றிபெற்றது. இறுதியில் யாழ். சென்றலைட்ஸ் அணி 14.5 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் எட்வேட் எடின் 43 பந்துகளை எதிர்கொண்டு ஐந்து சிக்ஸர்கள், ஏழு பவுண்டரிகள் அடங்கலாக 66 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்று அணியின் வெற்றிக்கு வித்திட்டார். மற்றும் ஜேம்ஸ் 39 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் மதுஷன் 24 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார். இப்போட்டியின் ஆட்டநாயகனாக எடின் தெரிவு செய்யப்பட்டார்.

மற்றுமொரு போட்டியில் யாழ். சென்றல் அணியும் யாழ். பற்றீசியன்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ். சென்றல் அணி ராஜீவ்குமாரின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. ராஜீவ்குமாருக்கு நிகராக சலிஸ்ரனும் அதிரடியாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை சடுதியாக உயர்த்தினார். இறுதியில் யாழ். சென்றல் அணி 20 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ராஜீவ்குமார் 53 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர்கள், 11 பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 70, சலிஸ்ரன் 20 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், ஏழு பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 40, சுதர்சன் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அஜித் டார்வின், அலஸ்சீன், ஜக்ஷன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 174 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். பற்றீசியன்ஸ் அணி ஆரம்பம் முதலே சீரான இடைவெளியில் விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து வந்தமையால் வெற்றியிலக்கை நெருங்க முடியவில்லை. இருப்பினும் அலக்சீன் அதன் இரசிகர்களை குஷிப்படுத்தும் வகையில் இறுதி வரை களத்தில் நின்று ஓட்டங்களைக் குவித்தபோதிலும் அது வெற்றி பெறுவதற்கான வாய்ப்பை உருவாக்கவில்லை. நிறைவில் பற்றீசியன்ஸ் அணி 20 ஓவர்கள் முடிவில் ஒன்பது எட்டு விக்கெட்டுக்களை இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் அலக்சீன் ஆட்டமிழக்காது 31, டானியல் 23, அஜித் டார்வின் 27, நோபேட் 13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ராஜீவ்குமார், சலிஸ்ரன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக ராஜீவ்குமார் தெரிவு செய்யப்பட்டார்.

மற்றுமொரு போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிசியன்ஸ் அணியும் கொக்குவில் கே.சி.சி.சி. அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய பருத்தித்துறை ஹாட்லிசியன்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றது. இதில் புருசோத்மன் இரண்டு சிக்ஸர்கள், பத்து பவுண்டரிகள் அடங்லாக 71, ஹரிகரன் 30 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பார்த்தீபன் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 155 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கொக்குவில் கே.சி.சி.சி. அணிக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய ஜெயரூபன் ஒரு முனையில் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தபோதிலும் மறுமுனையில் விக்கெட்டுக்கள் வேகமாகச் சரிந்தன. இதன் மூலம் ஹாட்லிசியன்ஸின் வெற்றி உறுதி செய்யப்பட்டதுடன் கொக்குவில் கே.சி.சி.சி. தோல்வியைத் தழுவ நேரிட்டது. இறுதியில் கொக்குவில் கே.சி.சி.சி. அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 128 ஓட்டங்களைப்பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் ஜெயரூபன் 30 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர்கள், பத்து பவுண்டரிகள் அடங்கலாக 56, சத்தியன் 17, பார்த்தீபன் 15 ஓட்டங்களைப் பெற்றனர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக புருசோத்மன் தெரிவு செய்யப்பட்டார்.

விளையாட்டுச் செய்திகள்

# இறுதியில் கரவெட்டி ஞானம்ஸ்

(வத்திராயன்)

வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதி ஆட்டத்திற்கு கரவெட்டி ஞானம்ஸ் அணி முன்னேறியுள்ளது.

வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் இப்போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டம் அண்மையில் உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

அணிக்கு 11 பேர் கொண்ட இப்போட்டித் தொடர் 12 ஓவர்களைக் கொண்டதாக நடாத்தப்பட்டது.

முதலாவது அரையிறுதிப் போட்டியில் கரவெட்டி ஞானம்ஸ் அணியும் கணேசாந்தா அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஞானம்ஸ் அணி 12 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 95 ஓட்டங்களைப் பெற்றது. இதில் செந்தூரன் 28, அகிலன் 13, அருண் 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அஜந்தன் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 96 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கணேசாந்தா அணி 10 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் அஜந்தன் 15, லோஜி 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அனுஷஜெயந்தன், தீபன் ஆகியோர் தலா இரண்டு, செந்தூரன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இவ்வெற்றியின் மூலம் ஞானம்ஸ் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விரைவில் ஆரம்பம்

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்படவுள்ள பிரிவு மூன்றின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான முதல் சுற்று ஆட்டங்கள் விரைவில் நடைபெறவுள்ளன.

இப்போட்டித் தொடருக்கான நிரலில் தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாகவும், இதன் பின்னர் இப்போட்டித் தொடரின் முதற் சுற்று ஆட்டங்கள் நடைபெறவுள்ளதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டாம் சுற்று ஆட்டங்கள் நிறைவடைந்து தற்போது மூன்றாவது சுற்று ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இச்சுற்றுப் போட்டி விரைவில் நிறைவடையவுள்ள நிலையில் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஆட்டங்கள் நடைபெறும் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இப்போட்டிக்குத் தயாராகும் வகையில் யாழ். மாவட்ட 19 வயதுப் பிரிவு அணிகள் தீவிர பயிற்சிகளில் ஈடுபடுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# வென்றது விண்மீன்

(பொலிகண்டி)

பொலிகண்டி பாரதி விளையாட்டுக்கழகம் நடாத்தும் அணிக்கு ஏழு பேர் கொண்ட கால்பந்தாட்டத் தொடரின் லீக் ஆட்டமொன்றில் விண்மீன் அணி வெற்றி பெற்றுள்ளது.

வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டு வரும் இப் போட்டித்தொடர் பொலிகண்டிபாரதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் திக்கம் இளைஞர் அணியும் பலாலி விண்மீன் அணியும் மோதின.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் முற்பாதி ஆட்டத்தில் ஒவ்வொரு கோலைப் பெற்றிருந்தன.

பிற்பாதி ஆட்டத்தில் வெற்றிக்கோலைப் பெற்றுக்கொள்ள இரு அணிகளும் முனைப்புடன் களத்தில் செயற்பட்டன. பந்து அங்குமிங்குமாக பறந்தது. இந்த வேளையில் தமக்கு கிடைத்த வாய்ப்பை உரிய முறையில் பயன்படுத்திய விண்மீன் அணி அதனைக் கோலாக்கி போட்டியில் முன்னிலை வகித்தது. இதன் பின்னர் ஆட்டம் சூடு பிடித்தபோதிலும் இரு அணிகளாலும் மேலிதிக கோல் எதனையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை. முடிவில் விண்மீன் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

# பொம்மர்ஸ், அன்ரனீஸ் முன்னேற்றம்

(வடமராட்சி)

நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் வடமாகாண கால்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் நேற்று முன்தினம் நடைபெற்ற இரு ஆட்டங்களில் வதிரி பொம்மர்ஸ் மற்றும் சென். அன்ரனீஸ் அணிகள் வெற்றிபெற்றன.

கழுகுகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடர் பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடைபெற்று வருகின்றது.

இதில் முதல் போட்டியில் வதிர் பொம்மர்ஸ் அணியும் சக்கோட்டை சென்.சேவியர் அணியும் மோதின. இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் முதல் பாதி ஆட்டத்தில் முட்டி மோதிக் கொண்டதன் காரணமாக முற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளாலும் கோல் எதனையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை. பிற்பாதி ஆட்டத்தில் எழுச்சிபெற்ற வதிர் பொம்மர்ஸ் அணி எதிரணி கோட்டைக்குள் நுழைந்து சிறப்பானதொரு கோலைப் போட்டுக் கொண்டது. இதற்குப் பதிலடி கொடுக்கும் முனைப்புடன் இறுதி வரை போராடிய சென். சேவியர் அணியின் முயற்சி அனைத்தும் பயனில்லாமல் போனது. இறுதியில் பொம்மர்ஸ் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

மற்றுமொரு போட்டியில் மூளாய் வளர்மதி அணியும் சென். அன்ரனீஸ் அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய சென். அன்ரனீஸ் அணி கோல் மழை பொழிந்தது. வளர்மதி அணி ஒரு கோலையானது பெற்றுக் கொள்ள முயற்சித்தபோதிலும் சென். அன்ரனீஸ் அணியின் பிற்கள வீரர்களின் பலமான தடைகளை தகர்த்து கோல் கம்பத்திற்குள் நுழைய முடியவில்லை. இறுதியில் சென். அன்ரனீஸ் அணி 5-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015

(தேர்தல் மாவட்டம் - வன்னி)



குலசிங்கம் திலீபன்
முதன்மை வேட்பாளர்



ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதன் பின்னர் இந்தத் தடவைதான் அது சிக்கலான ஒரு தேர்தல் களத்தை சந்திக்கின்றது. விடுதலைப்புலிகளின் காலத்தில், அவர்களால் உருவாக்கப்பட்ட தமிழத் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்து வந்த எல்லாத் தேர்தல்களிலும் எவ்வித பிரச்சினைகளையும் எதிர்கொள்ளும் நிலைமைகள் இருக்கவில்லை.

போரின் பின்னர் வந்த தேர்தல்களிலும் பெரிய எதிர்ப்புக்களை கூட்டமைப்பு சந்திக்கவில்லை.

2010 ஆண்டு இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தல், அதன் பின்னர் வந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல், வட மாகாண சபை தேர்தல் என எல்லாவற்றிலும் பாரிய வெற்றிதான். சில வேளைகளில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் எதிர்பார்த்ததை விடவும் அதிக வாக்குகளை தமிழ் மக்கள் அள்ளி வழங்கியிருந்தனர்.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழர்கள் வாழும் பிரதேசங்கள் என்று பார்த்தாலும், வடக்கின் களமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இருப்பையும் ஆதிக்கத்தையும் வெளிப்படுத்துகின்றது. வடக்கில் கடந்த தேர்தல்களுக்கு எளிதாக முகம் கொடுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இம்முறை கலக்கமான நிலையிலேயே உள்ளனர்.

முன்னைய தேர்தல்களில், இரண்டு தரப்பினரே எதிரெதிர் போட்டியாளர்களாக இருந்துள்ளனர். தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஆளும் தரப்புடன் இணைந்து போட்டியிடும் ஈ.பி.டி.பி மற்றும் தென்னிலங்கை கட்சிகள் என அவை காணப்பட்டன.

எதிர்வரும் தேர்தலில், தமிழ் தேசியத்தை முன்னிறுத்தி மேலும் இரண்டு கட்சிகள் வந்துள்ளன. கடந்த தேர்தல்களில் ஒதுங்கியிருந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி-மற்றும், முன்னாள் போராளி-களைக் கொண்ட ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியன தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கடுமையாக குற்றம்சாட்டியவாறு களத்தில் நிற்கின்றன.


இவ்விரு கட்சிகளும் வாக்குகளைப் பெறுவதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மிஞ்சும் என்று சொல்வதற்கில்லை எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு முன்னர் கிடைத்த வாக்குகளை சிதறடிக்கும் நிலையை ஏற்படுத்தும் என்றே அரசியல் நோக்கர்கள் பலரும் எதிர்வு கூறுகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் அந்த அச்சம் இப்போது ஏற்பட்டுள்ளதை அவர்களின் தேர்தல் பரப்புரைகளிலிருந்து அவதானிக்க முடிகின்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனையும் அவருடன் மாவை சேனாதிராஜாவையும் விரல் நீட்டி குற்றம்சாட்டுகின்றார்.

இதனை விடவும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறித்து கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வரும் வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனின் கருத்துக்களும் அவர்களுக்கு இப்போது பாதிப்பையே ஏற்படுத்தியுள்ளது. இன்று தமிழருக்கு தமிழரே எதிரியாகிவிட்டனர் என்று மாவை சேனாதிராஜா அழாக் குறையாக வேதனைப்படுகின்றார்.

இந்நிலையில், இம்முறை தங்கள் வீணைச் சின்னத்தில் போட்டியிடும் ஈ.பி.டி.பி.யினர் இந்த நிலைமைகளை விரக்தியானதொரு மனநிலையில் வடக்கிலுள்ள தமிழ் மக்கள் இருப்பதை காணமுடிகின்றது. தேர்தலுக்கு இன்னும் சில நாட்களே உள்ள நிலையில் முன்னரைப் போல் பாரிய தேர்தல் பரப்புரைக் கூட்டங்களை நடத்த முடியாத நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சிறு சிறு கூட்டங்களையே நடத்தி வருகின்றனர். மக்கள் அந்த கூட்டங்களுக்கு கடந்த காலங்களைப் போல செல்வதையும் காண முடியவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரை கூட்டங்களுக்கு மக்களை வரவழைக்கும் பணிகளை குறிப்பாக பிரதேச சபை உறுப்பினர்களே மேற்கொண்டு

# வாக்குகள் சிதறுவது மட்டுமல்ல, வாக்களிப்பு வீதமும் குறையும் நிலை!



- விஸ்வா கட்டுரையிலிருந்து.

இணைந்து செயற்படும் சுமந்திரனையும் கடுமையாக குற்றம்சாட்டும் வகையில் மக்கள் மத்தியில் பரப்புரைகளை மேற்கொண்டுள்ளனர்.

தங்களுக்கு முழுமையான வாக்குகளை அளித்து பலப்படுத்தினால் அடுத்த ஆண்டில், 2016இல் இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வைப் பெற்றுத்தருவோம் என்ற நடைமுறைச் சாத்தியமற்ற வாக்குறுதியை தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் மக்களிடம் தெரிவித்து வருகின்றனர்.

ஐ.நாவின் விசாரணை அறிக்கையை தடுத்து நிறுத்தியதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் எனவும், அரசாங்கத்துடன் மறைமுக உறவுகளைப் பேணி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு துரோகம் செய்வதாகவும் தமிழத் தேசிய மக்கள் முன்னணியினர் கூறுகின்றனர். ஊடகவியலாளர் ந.வித்தியாதரனை தலைமை வேட்பாளராகக் கொண்ட ஜனநாயகப் போராளிகள் கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிராக மக்கள் மத்தியில் கருத்துக்களை காட்டமாகவே முன்வைத்து வருகின்றது.

விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அவர்களுக்கு இடமளிக்க மறுப்பதும், இப்போது அவர்களையே சந்தேகத்துடன் பார்ப்பதும், அவர்களை காட்டிக் கொடுப்பவர்கள் என்று கூறுவதும் களத்தில் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்த போராளிகளையும், களத்தில் போராடிய ஏனைய முன்னாள் போராளிகளையும் கொச்சைப்படுத்துவதாக அமைந்துள்ளதென வித்தியாதரன் கூறுகின்றார். அவர் கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தனையும் மற்றும், உன்னிப்பாக அவதானித்த வண்ணம், பரப்புரைகளில் சற்று அடக்கி வாசிப்பதாகவே தெரிகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு கடந்த காலங்களில் கிடைத்த வாக்குகள் இம்முறை சிதைவடைவதை அவர்கள் விரும்புகின்றார்கள். தங்களுக்கு மக்கள் மத்தியில் புதிய ஆதரவாளர்கள் கிடைக்காவிட்டாலும் தங்களுக்கு ஏற்கனவே இருக்கும் வாக்கு வங்கியின் மூலம் இரண்டு ஆசனங்களாவது கிடைக்கும் என அவர்கள் எதிர்பர்ர்க்கின்றனர்.

தமிழ் மக்களின் எண்ணவோட்டம் எவ்வாறிருக்கின்றது என்று அவதானிக்கும் போது - அவர்கள் முன்னர் நடைபெற்ற தேர்தல் காலங்களில் காணப்பட்ட சுறுசுறுப்பான மனநிலையில் இல்லை என்றுதான் கூறமுடிகின்றது. கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தல் வரை இருந்த மனநிலையில் அவர்கள் இல்லை. வரப்போகும் பாராளுமன்றத் தேர்தல் குறித்து அவர்கள் அதிக அக்கறை கொண்டுள்ளதாக தெரியவில்லை.

இம்முறை, யாருக்கு வாக்களித்தும் என்ன வரப்போகின்றது என்கின்ற வருகின்றனர். இன்றைய சுழ்நிலையில் தாங்கள் சிரமப்படுவதை அவர்களே ஒப்புக்கொள்கின்றனர்.

கடந்த ஐந்து வருடங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களின் வாழ்வாதார நடவடிக்கைகள் தொடர்பில் எதனையும் செயற்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டை மக்கள் தற்போது முன்வைக்கின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையிலுள்ள வட மாகாண சபையும் கடந்த ஒன்றரை வருட காலத்தில் உருப்படியாக எதனையுமே செய்யவில்லை என்பதையும், ஆட்சிமாற்றம் ஏற்பட்டு, அவர்கள் கேட்ட ஆளுநர் மாற்றமும் இடம்பெற்று எட்டுமாதங்கள் ஆகிவிட்ட போதும் மக்களுக்கான செயற்பாடுகளில் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை என்பந்த மக்கள் உணரத் தொடங்கிவிட்டனர். அதனால் இம்முறை வடக்கில் மக்களின் வாக்களிப்பு வீதம் குறையும் நிலை ஏற்படலாம். வாக்குகள் சிதறிப் போவதுடன் வாக்களிப்பு குறைவடைவதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு சிக்கலான நிலைமையினையே ஏற்படுத்தும்.



# பழி நம் மேல் விழுந்திட்டுது!

ஒரு தம்பதிக்கு இரண்டு குறும்புக்கார மகன்கள் இருந்தனர். அவர்களை நல்வழிப்படுத்தப் பெற்றோர் செய்த முயற்சி எதுவும் பலனளிக்கவில்லை.

அந்த ஊருக்குப் புதிதாக ஒரு சாமியார் வந்திருந்தார். அவரிடம் தங்கள் மகன்களை திருத்த என்ன செய்யலாம்? என்று கேட்டு வரலாமென்று முடிவு செய்து இளையவனை அவரிடம் அழைத்துச் சென்றனர்.

சாமியார் "இளையவன் இங்கு ஒருநாள் இருக்கட்டும். அவனை இங்கு விட்டுச் செல்லுங்கள். மாலையில் வந்து கூட்டிச் செல்லுங்கள்" என்று கூறினார்.

பெற்றோரும் அவனை அங்கே விட்டுவிட்டு வீடு திரும்பினார்

சாமியார் அந்தச் சிறுவனிடம் மெதுவாக, "கடவுள் எங்கே?" என்று கேட்டார்.

சிறுவன் முகத்தில் சிறிது பயம் கலந்த அதிர்ச்சி. பதில் இல்லை.

புரியவில்லையோ என்று நினைத்து அதே கேள்வியை இன்னும் சற்று அழுத்தமாக கேட்டார் சாமியார்.

சிறுவன் முகத்தில் அதிர்ச்சி அதிகமானது. இன்னும் அதிக பலமாக மூன்றாம் முறை வந்த கேள்வியில் துள்ளிக் குதித்த சிறுவன், வேகமாக வீட்டை நோக்கி ஓடினான். வீட்டிற்குள் சென்ற அவன் ஒரு அறையினுள் ஒளிந்துகொண்டான்.

இதைக்கண்ட அவனது மூத்த சகோதரன் அவனிடம், "என்ன ஆச்சு? ஏன் ஒளிந்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டான்.

அவன் கவலையுடன், "இரண்டு பேரும் நல்லா மாட்டிக்கிட்டோம். அந்த சாமியார் கடவுளை காணோமாம், பழி நம்ம மேல விழுந்திட்டுது" என்றான்.

# வெடிகுண்டின் கதை!

போர் என்றால் வெடி குண்டுகளை, எதிரி நாட்டின் மீது போட்டு அழிப்பது வழக்கமாக இருந்து வருகிறது. இதனாலேயே, போர் என்றவுடன் வெடிகுண்டுகள் நம் நினைவுக்கு வந்துவிடும். இந்த வெடிகுண்டுகளை முதன் முதலில் கண்டுபிடித்தது சீனர்கள் என்ற கருத்து பரவலாக இருந்து வருகிறது; ஆனால், உண்மை வேறு.

வரலாற்றைப் பார்க்கும்போது போரையே தொழிலாகக் கொண்டவர்களின் கவனத்தில், அவர்கள் காலகட்டத்திலேயே கண்டுபிடிக்கப்பட்ட வெடி குண்டு, ஏனோ அவர்கள் கவனத்திற்கு வராமல் போயிருந்தது தெரிய வருகிறது.

வெடி மருந்தை ஒரு குழாயினுள் கொட்டி, போரில் அதை யார், எப்படி, முதலில் பயன்படுத்தினர் என்பதெல்லாம் உறுதியாகத் தெரியவில்லை.

வெடி மருந்து செய்யும் முறையை முதன் முதலில் கூறியவர், ரோஜர் பேக்கன் (1216--1292) என்பவர். இவர், பிரான்சிஸ்சன் என்ற சபையைச் சேர்ந்த துறவி. எதையும் சோதித்து அறிவதன் முக்கியத்துவத்தை உணர்த்தியவர்.

ஒரு பொருள் எரிவதற்கு காற்று (ஒட்சிசன்) தேவை என்று கண்டுபிடித்துச் சொன்னவரும் இவர் தான். கண் பார்வையைச் சரி செய்ய கண்ணாடியை முதன் முதலில் கண்டுபிடித்தவரும் ரோஜர் பேக்கனே! அவர், தன் காலத்து அறிவியல் துறை அனைத்தின் வினைப்பயன்களை எல்லாம், 1266இல் ஒரு நூலாக தொகுத்துள்ளார்.



அந்த நூலில் வெடிமருந்து செய்யும் முறையை எழுதியிருக்கிறார். அது: ஏழு பங்கு வெடி உப்பும், ஐந்து பங்கு கரித்தூளும், அதற்குச் சமமாக கந்தகமும் சேர்த்தால், அக்கலவையைக் கொண்டு பெரிய மின்னலையும், இடி முழக்கத்தையும் உண்டாக்கலாம் என்று எழுதியுள்ளார்.

ஆனால், மேலே கூறியிருப்பது போல புட்டுப் புட்டு எழுதவில்லை. கொடியவர் எவரும் இக்கண்டுபிடிப்பைத் தவறாக பயன்படுத்தி விடுவரோ என அஞ்சி, எழுத்துகளை மாற்றி அமைத்து, புதிர் போல எழுதி வைத்து விட்டார். அது பல காலம் அறியப்படாமலே இருந்துவிட்டது.

# உருப்படியான யோசனைகள்...




❁ உணவுக்கான பொருட்களை உலர்த்துவதற்காக வெயிலில் காய வைக்கும்போது நடுவில் ஒரு முகம் பார்க்கும் கண்ணாடியை வைத்துவிட்டால் காக்கை, குருவி போன்ற பறவைகளின் தொல்லை இருக்காது.

❁ கண்ணாடி டம்ளர்கள் ஒன்றுக்குள் ஒன்று வைத்து எடுக்க முடியாவிட்டால், உட்புறம் குளிர்ந்த நீரை விட்டு, வெளிப்புற டம்ளரை வெந்நீரில் சிறிது நேரம் வைத்திருந்தால் ஒட்டிக்கொண்ட டம்ளர்கள் தனித்தனியாக எடுக்க வரும்.

❁ செருப்புகள், சப்பாத்துகள் போன்றவற்றை வாழைப்பழத் தோலின் உட்புறத்தால் தேய்த்து, ஈரம் காய்ந்து போனதும், பொலிஷ் செய்தால் பளிச்சென்று அவை புதிதுபோல் தோன்றும்!

❁ மெழுகுவர்த்தி ஏற்றும்போது அகல் விளக்கில் நிறுத்தியபடி ஏற்றி வையுங்கள். தரையோ, ஜன்னலோ வீணாகாது.

❁ முகம் பார்க்கும் கண்ணாடிக்கு அருகிலுள்ள சட்டம் ஒன்றில் காந்தம் ஒன்றைப் பொருத்தி அதில் ஊசிகள், கொண்டை ஊசிகள் ஒட்ட வைத்துக் கொண்டு, தேவைப்படும்போது பயன்படுத்திக் கொள்ளலாம்.

❁ டிவியின் மீது எக்காரணம் கொண்டும் தண்ணீர் படக்கூடாது. உள்ளே போய்விட்டால் மின்சாரம் தாக்கி பிக்சர் டியூப் வெடிக்கும் அபாயம் உண்டு.

❁ சுண்ணாம்பில் சிறிது தேங்காய் இளநீர் விட்டு வைத்தால் இறுகிப் போகாமல் எப்போதும் இளகிய பதத்திலேயே உபயோகிக்க ஏதுவாக இருக்கும்.

❁ புடவைக்கு கஞ்சி போடும்போது கொடியில் உலரப் போடுவதைவிட, தரையில் விரித்துக் காய வைப்பது சிறந்தது. ஏனெனில் அயர்ன் செய்யும்போது சுலபமாக இருக்கும்.

❁ டிஷ்யூ பேப்பர் நாப்கின்களைப் போட்டுக் கண்ணாடிக் கதவுகளைத் துடைத்தால் பளீரென்று இருக்கும்.

# சினிமாவின் கலை: பாகுபலியை முன்வைத்து

- சாரு நிவேதிதா — 1



**பா**குபலி - இந்தியாவிலேயே மிக அதிக செலவில் (250 கோடி) உருவான பிரம்மாண்டமான படம். உண்மைதான். கதையின் நாயகனும் நாயகியும் இடம்பெறும் காதல் காட்சிகளைத் தவிர, மற்ற பெரும்பாலான காட்சிகளில் பிரமிக்கவைக்கும் பிரம்மாண்டத்தை நிகழ்த்திக் காட்டியிருக்கும் இயக்குனர், ஒளிப்பதிவாளர், கலை இயக்குனர் மற்றும் இதன் உருவாக்கத்துக்குக் காரணமான அத்தனை பேரும் நம் பாராட்டுக்குரியவர்கள்.

இதுவரை இந்தியாவில் இப்படி ஒரு பிரம்மாண்டமான படத்தை யாரும் எடுத்ததில்லை. பாகுபலியே அதைத் தொடங்கிவைத்திருக்கிறது. ஒரு நல்ல பொழுதுபோக்குச் சித்திரம். அனைவரும் பார்த்து மகிழலாம். ரம்யா கிருஷ்ணனின் நடிப்பு அருமை. வசனம் சில இடங்களில் கவனிக்க வைக்கிறது. (வீரனுக்கும் அரசனுக்கும் உள்ள வித்தியாசத்தை சிவகாமி - ரம்யா கிருஷ்ணன் - சொல்லும் இடம்). சில இடங்களில் மொக்கையாக உள்ளது. (நாயகனும் நாயகியும் முதல்முதலாகச் சந்தித்து காதல் வசனம் பேசும் இடத்தில், "நீ பெண் நான் ஆண்" என்று நாயகன் சொல்லும்போது பார்வையாளர்கள் சிரிக்கிறார்கள்). பொதுவாகவே கூர்மையான வசனங்களுக்கு நம்முடைய வசனகர்த்தாக்கள், ஜேம்ஸ் ஹாட்லி சேஸ் நாவல்களைப் படித்துப் பயிலலாம். அவருடைய பாத்திரங்கள் கூர்மையான "நாக்கு" படைத்தவை.

படத்தின் மற்றொரு முக்கியமான குறை, பட்த்தின் முடிவில் முடிவே இல்லை. என்னதான் இது படத்தின் முதல் பாகம் என்றாலும்கூட, அதற்கும் ஒரு பொருத்தமான முடிவைக் கொடுத்திருக்க வேண்டும். அப்படியில்லாமல், படம் திடீரென்று திடுதிப்பென்று "முடிந்ததும்" பார்வையாளர்கள் அத்தனை பேரும் "என்ன நடந்தது?" என்ற குழப்பத்தில், இருக்கையிலிருந்து நீண்ட நேரம் எழுந்துகொள்ளவே இல்லை. ஒரு ராஜா ராணி கதையை, இப்படித் திடீரென்று எந்த நியாயமும் இல்லாமல் முடித்தால், பார்வையாளர்கள் ஏமாந்துதான் போவார்கள். அந்த ஏமாற்றத்தை அரங்கில் மிகத் தெளிவாகக் காண முடிந்தது.

அதிலும் "நான் ஈ" (2012) என்ற சுவாரசியமான படத்தை இயக்கிய ராஜமௌலிக்கு, ஒரு படத்தை எங்கே முடிப்பது என்று தெரியவில்லையா என்பது ஆச்சரியமாக உள்ளது.

Lord of the Rings (2001-03), மூன்று பாகங்களாக வெளிவந்த படம். மொத்தம் ஒன்பதரை மணி நேரம். மூன்று மணி நேரத்தில் முதல் பாகம் முடியும்போது, அது அரைகுறையாக முடியவில்லை. படத்தின் முதல் பாகம் முடியும்போது, மாய மோதிரத்தின் நெடும் பயணத்தில் ஒரு பகுதி முடிகிறது என்பதை நாம் மிகுந்த மனநிறைவோடு புரிந்துகொண்டு அடுத்த பகுதிக்குத் தயாராகிறோம். அப்படிப்பட்ட நிறைவை பாகுபலி அளிக்கவில்லை. திடீரென்று ஏற்பட்ட மின் தடையால் படம் நின்றுபோவதுபோல் முடிகிறது.

கதை ஒன்றும் பெரிதாக இல்லை. எல்லா வரலாற்றுக் கதைகளுக்குமான தலைவிதி ஒன்றுதான். ஆட்சியைப் பிடிக்க அடிதடி, தந்தையை மகன் கொல்வது, சகோதரனை இன்னொரு சகோதரனே போட்டுத் தள்ளுவது" இப்படியாக மகாபாரதத்திலிருந்து மொகலாய அரச குடும்பங்கள் வரை - ஏன், இன்றைய ஜனநாயக "அரச குடும்பங்கள்" உட்பட - எல்லாக் க்தையும் ஒரே கதைதான். அப்படி ஒரு கதைதான் பாகுபலியும். எனவே அதைப்பற்றிச் சொல்லவேண்டியதில்லை. ஆனால், படத்தைப் பற்றிச் சொல்லவும் அதிகம் இல்லை என்பதுதான் பிரச்சினை. அதிலும், பிரம்மாண்டம் என்பதில் இந்தியாவிலேயே முதல்முதலாக சாதனை படைத்திருக்கும் ஒரு வரலாற்றுக் காவியத்தைப் பற்றி எழுதுவதற்கு, இரண்டு வரிக்கு மேல் எதுவும் இல்லை என்றால் அது மிகவும் கவலைக்குரிய விஷயம். இது பாகுபலியின் பிரச்சினை மட்டும் அல்ல. ஒட்டுமொத்தமாக தமிழ் மற்றும் தெலுங்கு சினிமாவின் பிரச்சினை என்று தோன்றுகிறது. அதைப்பற்றி விசாரிப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.




பாகுபலி, 2000ஆம் ஆண்டு வெளிவந்த க்ளாடியேட்டர் என்ற ஹொலிவுட் படத்துக்கான இந்திய எதிர்வினை என்று பல விமரிசகர்களும் பார்வையாளர்களும் மகிழ்வுடன் சொல்கிறார்கள்.

நல்லது. க்ளாடியேட்டர் படத்தில் பூதக் கண்ணாடி வைத்துத் தேடினாலும் கிடைக்காத வஸ்து, வரலாறு. மார்க்கஸ் ஔரேலியஸ், அவரது மகன் கமோடஸ் போன்ற ெப்யர்களும், ஜெர்மானிய ஆதிவாசிகளை ஔரேலியஸின் படை ஒடுக்கியது போன்ற சில சம்பவங்களும் மட்டுமே அதில் வரலாறு; மற்றதெல்லாம் வெறும் ஹொலிவுட் கற்பனை. அப்படிப்பட்ட ஒரு கற்பனையான ஹொலிவுட் மசாலா படத்தின் ஒவ்வொரு காட்சியிலும், கவிதையும் ஞானமும் மிளிர்ந்துகொண்டிருந்ததை நாம் பார்த்தோம். மக்ஸிமஸ் என்ற கற்பனைப் பாத்திரத்தின் ஆரம்ப வசனமே ஞானத்தின் ஒளிக்கீற்றாக வீசிச் செல்லும். (What we do in life, echoes in eternity!).

இன்னொரு இடம், ஔரேலியஸும் மக்ஸிமஸும், ஔரேலியஸின் தனியறையில் பேசிக் கொள்ளும் காட்சி -

**ஔரேலியஸ்:** ஜெர்மானிய ஆதிவாசிகளோடு போரிட்டு வென்ற மக்ஸிமஸுக்கு - ரோமாபுரியின் மிகப்பெரிய தளபதிக்கு - நான் என்ன பரிசு கொடுக்கட்டும்?

**மக்ஸிமஸ்:** என் வீட்டுக்குப் போக அனுமதி தாருங்கள்.

**ஔரேலியஸ்:** நான் இறந்துகொண்டிருக்கிறேன் மக்ஸிமஸ். ஒரு மனிதன் தன் முடிவைப் பார்த்துவிட்டான் என்றால், அவன் வாழ்ந்த வாழ்க்கையில் ஏதாவது அர்த்தம் இருக்க வேண்டும் என்று தெரிந்துகொள்ள விரும்புவான். வருங்காலத்தில் வரலாறு என்னை என்னவென்று பேசும்? தத்துவவாதி என்றா? போர் வீரன் என்றா? கொடுங்கோலன் என்றா? ரோமாபுரியின் பழைய பெருமையை மீட்டுத் தந்த பேரரசன் என்றா? ஆம் ஒரு காலத்தில் ரோமாபுரி என்றோர் மகத்தான கனவு இருந்தது. இப்போது அதைப்பற்றி நீ சத்தமாகக்கூட பேச முடியாது. பேசினால், அந்தக் கனவு கலைந்துவிடும். அவ்வளவு பலஹீனமாக இருக்கிறது அது. அதைப்பற்றி வெறுமனே கிசுகிசுக்க மட்டுமே முடியும். வரும் குளிர் காலம்வரை கூடத் தாங்குமா என்று தெரியவில்லை. எனவே மக்ஸிமஸ், சத்தமாக வேண்டாம் ரகசியமாகவே பேசுவோம். எனக்கு உன் வீட்டைப் பற்றிச் சொல்.

**மக்ஸிமஸ்:** மலை உச்சியில் உள்ள ஒரு எளிமையான வீடு அது. சூரிய ஒளியின் கதகதப்பை வாங்கித் தக்கவைத்துக் கொள்ளும் கல் வீடு. தோட்டத்தில் மூலிகைச் செடிகளின் நறுமணம் பகல் முழுவதும் வீசிக்கொண்டிருக்கும். மாலையில் மல்லி கையின் மணம் காற்றில் தவழ்ந்து வரும். வாசலில் ஒரு புன்னை மரம். சுற்றி வர அப்பிள், அத்தி, பேரிக்காய் மரங்கள். கன்னங்கரேல் என்ற கறுப்பு மண்... என் மனைவியின் தலைமுடியைப்போல. வீட்டிலிருந்து கீழே இறங்கும்போது தெற்கே திராட்சைக் கொடிகள், வடக்கே ஒலிவ் மரங்கள்...

**ஔரேலியஸ்:** கடைசியாக நீ எப்போது உன் வீட்டுக்குப் போனாய்?

**மக்ஸிமஸ்:** இன்று காலையோடு இரண்டு ஆண்டுகள், 264 தினங்கள் முடிந்திருக்கின்றன அரசே.

**ஔரேலியஸ்:** உன்னைப் பார்த்துப் பொறாமைப்படுகிறேன் மக்ஸிமஸ்.

(தொடரும்)

# நிகழ்வுகளின் பதிவுகள்....








வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியும் லண்டன் ஜெயாஞ்சலி நிறுவனமும் இணைந்து வழங்கிய நாட்டியப் பெருவிழா அண்மையில் வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நடைபெற்றபோது......





உயில் கலை இலக்கிய சங்கம் ஏற்பாடு செய்த குப்பிழான் ஐ. சண்முகனின் பிரபஞ்ச சுருதி (கவிதைத் தொகுதி) அறிமுக நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றபோது...





அகில இலங்கை கம்பன் கழகத்தின், கம்பன் விழா கடந்த வெள்ளிக்கிழமை நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெற்றபோது...





வரலாற்றுப் புகழ்மிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வருடாந்த ஆடிக் கார்த்திகை விழா அண்மையில் நடைபெற்றபோது...






வேலணை மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கனடாக் கிளையின் 20 ஆவது வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு அண்மையில் இடம் பெற்ற போது...

# ஏகபோகத்துக்கு முற்றுப்புள்ளி கூட்டமைப்பின் குள்ளத்தனம் அம்பலம்

## கிளாலியில் வேட்பாளர் சந்திரகுமார் தெரிவிப்பு



(கிளாலி)

பல தசாப்த காலமாக மக்களை ஏமாற்றி அரசியலில் நிலைத்திருந்த அரசியல் தரப்புப் பிரதிநிதிகளின் முகமூடிகள் இன்று கிழித்தெறியப்பட்டுள்ளன வாய்ப் பேச்சுக்களால் மட்டும் மக்களைக்கவரும் அவர்களின் தந்திரோபாயங்கள் வெளிச்சத்திற்கு கொண்டுவரப் பட்டுள்ளன. இன்று மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் அரசியல தெளிவு சரியான மக்கள் பிரதிநிதிகளின் உருவாக்கத்திற்கு வழிவகுக்கும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பி.யின் வேட்பாளருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை கிளாலியில் நடைபெற்ற மக்கள சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்.

இலங்கை சுதந்திரமடைந்த காலம்தொடக்கம் இன்றுவரையான காலப்பகுதி தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் ஒரு இருள் சூழ்ந்த காலமாகவே அமைந்துவிட்டது அன்று தொடகம் எமது மக்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தின் ஏக பிரதிநிதிகளாகக் கருதிக்கொண்ட ஒரு தரப்பு மக்களை உணர்ச்சி வசப்படுத்தும் வார்த்தைப்பிரயோகங்களால் கவர்ந்திழுத்து தமது அரசியல் இருப்பைத் தக்கவைத்து வந்தது ஆனால் தமிழ் மக்கள் காலம் காலமாக எதிர்கொண்டு வந்த அரசியல் உரிமை தொடக்கம் எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வினைப் பெற்றுக் கொடுக்கவில்லை.

அதற்காக அர்ப்பணத்துடன் அவர்கள் உழைக்கவும் இல்லை மாறாக அவர்களின் நிதானமற்ற அரசியல் அணுகுமுறைகள் காரணமாக மக்கள் பாரிய அழிவுகளையே எதிர்கொண்டனர். மக்கள் வகை தொகையின்றி அழிந்தபோதும் அவர்கள் தன்நல அரசியல் போக்கிலிருந்து மாறவில்லை.

அதுமட்டுமன்றி பாரிய யுத்த வலயத்திற்குள் சிக்குண்டும் யுத்தத்திற்கு முகம் கொடுத்தும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கூட அவர்கள் உண்மையாக சேவையாற்ற முன்வரவில்லை.

இறப்புக்களையும் அழிவுகளையும் பயன்படுத்தி தமது அரசியல் தளத்தை தக்கவைத்துக் கொள்வதில் மட்டுமே குறியாக இருந்தனர். அதுமட்டுமன்றி மக்களின் விடிவுக்காக ஆயுதமேந்திப் போராடி உயிர்த் தியாகம் செய்த போராட்ட இயக்கங்களைக் கூட தமது தனிப்பட்ட அரசியல் வாழ்வுக்காக இழிவுபடுத்தி வருகின்றனர். அவர்களின் இந்த சுயநலப்போக்கு இன்று அப்பட்டமாக வெளிச்சத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

மக்கள் இன்று தமக்காக திறந்த மனதுடன் சேவையாற்றுபவர்களே தமது பிரதிநிதிகளாக வரவேண்டும் என்ற நிலைப் பாட்டை எடுத்துள்ளனர்.

இன்றைய தேர்தல் காலத்திலே தமிழ் மக்கள் இந்நிலைப் பாட்டில் திடமாகவும் உறுதியுடனும் இருக்கின்ற கள யதார்த்தத்தை காணமுடிகின்றது. பாரிய யுத்தம் முடிவுக்கு வந்த தன் பின்னர மக்களின் அடுத்த கட்ட வாழ்வியலை நிலைப்படுத்துவதில் அதிகூடிய அரசியல் பலத்தைக் கொண்ட தமிழர் தரப்பு அணுவளவேனும் உழைக்கவில்லை என்ற ஆதங்கம் மக்களின் மனங்களிலே மேலோங்கியுள்ளது. இந்நிலையில் மீள்குடியேற்ற காலத்தில் மக்களோடு நின்று உண்மையாக உழைத்தவர்களே தொடர்ந்தும் தமது பிரதிநிதிகளாக வரவேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாகவுள்ளனர்.

எனவே மக்களின் இந்த நிலைப்பாடு அடுத்துவரும் காலங்களில் ஒரு நிலையான அரசியல் தீர்வை நோக்கியதும் மக்களின் வாழ்வியல் மேம்பாட்டுக்குமான செயற்பாட்டை இலக்காகக் கொண்டு நிதானமான அரசியல் அணுகுமுறையைக் கையாண்டுவரும் தமிழ் அரசியல் தரப்பிற்கு உச்சகட்ட பலத்தைத் தரும் என்பதில் ஐயமில்லை அந்தப் பலம் எமது மக்கள் எதிர்கொள்கின்ற அனைத்து வகையான பிரச்சினைகளுக்கும் தீர்வைப் பெற்றுத்தரும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சந்தை வீதி புனரமைப்பிற்கு தரமற்ற கற்கள் விநியோகம்

## உடுப்பிட்டி நகர வர்த்தகர்கள் சுட்டிக்காட்டு

உடுப்பிட்டி சந்தை வீதியின் புனரமைப்பிற்கு தரமற்ற கற்கள் கொண்டுவரப்பட்டிருப்பதாக நகர வர்த்தகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

உள்ளூர் அமைப்புக்கள் ஊடாக மேற்கொள்ள வேண்டிய இவ்வீதியின் புனரமைப்பினை பிரதேச சபையின் ஆயுட்காலம் முடிவடைந்த நிலையில் தனியார் ஒப்பந்தக்காரர்களிடம் பிரதேசசபை ஒப்படைத்துள்ளதாகவும் முறைப்பாடுகள் எழுந்துள்ளன.

இவ்வீதியின் புனரமைப்புக்காக கொண்டுவரப்பட்ட கற்களில் பாதியளவு கடற்கரையில் தோண்டியெடுக்கப்பட்ட தரம் குறைந்த கற்கள் எனவும் இவற்றை அகழ்ந்தெடுப்பது சட்டவிரோதமானதென்பதையும் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குடாநாட்டிலுள்ள பிரதேச சபைகள் யாவும் கலைக்கப்பட்டுள்ள நிலையில் சமகால தேர்தல் சூழலை பயன்படுத்தி சில அதிகாரிகள் முறைகேடாக இவ்வீதிப் புனரமைப்பில் ஈடுபட்டிருப்பதையும் இப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (18)

# அணைக்கட்டு அகன்றது மக்கள் மீள் குடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட வளலாய் பகுதியின் கடற்கரையோரமாக இராணுவத்தினரால் அமைக்கப்பட்டிருந்த பாரிய மண் அணை, கனரக இயந்திரங்களின் உதவியுடன் அகற்றப்படுகின்றது.

மீள்குடியேற்றத்திற்கென குறித்த பகுதி, கடந்த மார்ச் மாதம் 13 ஆம் திகதி விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள் படிப்படியாக மீள் குடியேறி வருகின்றனர்.

யுத்தம் இடம்பெற்ற போது, இராணுவத்தினரால் இரண்டு கிலோமீற்றர் நீளம வரையாக குறித்த அணைக்கட்டு அமைக்கப்பட்டிருந்தது.

இதனால் மீன்பிடியில் ஈடுபடுவோர் தமது படகுகளை கரைகளில் நிறுத்த முடியாது பெரும் சிரமத்திற்கு உள்ளாகினர்.

இதனையடுத்து இந்த விடயம் தொடர்பில் பிரதேச மக்களால் பிரதேச செயலருக்கு தெரியப்படுத்தப்பட்டதையடுத்து, மீள்குடியேற்ற அமைச்சினால் அணைக்கட்டை அகற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

# விளக்கமறியல் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ். கோப்பாய் பிரதேசத்தில் டைனமேட் வெடிமருந்தை தன்வசம் வைத்திருந்த பெண் ஒருவரை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க யாழ். நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கோப்பாய் பிரதேசத்தில் 11 கிலோ 330 கிராம் டைனமேட் வெடிமருந்தை வைத்திருந்த பெண் ஒருவரை நேற்றுமுன்தினம் கைது செய்த கோப்பாய் பொலிஸார், நேற்று யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தினர்.

இதன்போது சந்தேக நபரான பெண்ணை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க யாழ். நீதவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டுள்ளார்.


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015

(தேர்தல் மாவட்டம் – வன்னி)



பொ. குணபாலா




ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# வீதிகளில் வர்ணம் தீட்டினால் கடும் சட்ட நடவடிக்கை

## யாழ்.தெரிவத்தாட்சி அலுவலர் அறிவிப்பு

யாழ்.மாவட்டத்தில் தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறி வர்ணப் பூச்சுக்களால் வீதிகள் மற்றும் வீட்டு சுவர்களில் கட்சிச் சின்னங்கள், வேட்பாளர்களுடைய விருப்பிலக்கங்களை பொறிப்பிலிருப்பவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவத்தாட்சி அலுவலகர் என்.வேதநாயகன் எச்சரித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தினைப் பொறுத்தவரையில் தற்போது தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள், சுயேட்சைக் குழுக்கள் ஆகியன தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறி தமது பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக வர்ணப் பூச்சுக்களை பயன்படுத்தி வீதிகளிலும், வீட்டுச் சுவர்களிலும் தமது கட்சியின் சின்னங்கள், வேட்பாளர்களுடைய விருப்பிலக்கங்கள் ஆகியவற்றை எழுதி வருகின்றனர். இது தேர்தல் சட்டவிதிமுறைகளை மீறும் செயற்பாடாகும்.

இவ்வாறு எழுதப்பட்டுள்ளவற்றை அழிக்குமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், இவ்வாறான செயற்பாடுளில் ஈடுபடுகின்றவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொண்டு விதிமுறை மீறல்களை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருமாறு பொலிஸாருக்கும் உத்தரவு பிறபபிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அழிவை நோக்கிய பயணம் மகிந்த மீது கண்டனம்



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டில் அழிவை ஏற்படுத்தவே முயற்சிக்கின்றார் என ஜனநாயகக் கட்சியின் தலைவர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். நாட்டில் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் உள்ளிட்ட அனைத்து இன சமூகங்களும் சமாதானமாக வாழக் கூடிய பின்னணி உருவாக்கப்பட வேண்டும். ஒரே நாடாக இலங்கையை கட்டியெழுப்புவதே ஜனநாயகக் கட்சியின் நோக்கமாகும்.

பத்து அம்ச திட்டத்தின் அடிப்படையில் இம்முறை தேர்தல் பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. சிறுபான்மை இன சமூகத்தைச் சேர்ந்த ரகர் வீரர் தாஜுடீன் மரணம் பற்றிய முக்கிய உண்மைகள் அம்பலமாகியுள்ளன. குற்றச் செயலில் ஈடுபட்டவர்கள் தராதரம் பாராது தண்டிக்கப்பட வேண்டும்.மகிந்த ராஜபக்ஷ சிங்கள மக்களிடம் ஒன்றையும், தமிழ் மக்களிடம் ஒன்றையும், முஸ்லிம் மக்களிடம் வேறு ஒன்றையும் கூறி பிரசாரம் செய்து வருகின்றார். இந்த ஏமாற்று வேலைகளுக்கு கடந்த ஜனவரி மாதம் 8ஆம் திகதியே முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது. தொடர்ந்தும் மகிந்தவினால் மக்களை ஏமாற்ற முடியாது என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

# மன்னாரில் வலம் வருகிறது போலியான வாக்குச்சீட்டுக்கள்



மன்னாரில் வாக்காளர்களை குழப்பும் வகையில் போலியான மாதிரி வாக்குச் சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டு வருவதாக மன்னார் வாக்காளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

சரியான மாதிரி வாக்குச் சீட்டில் மூன்றாவதாக இலங்கை தமிழரசுக்கட்சிக்கு வீட்டுச் சின்னம் காணப்படுகின்றது. ஆனால் போலியான மாதிரி வாக்குச் சீட்டில் இலங்கை தமிழரசுக் கட்சியின் சின்னமாக மணிக்கூடு காணப்படுகின்றது.

மன்னார் எழுத்தூர், பெரிய கமம், செல்வநகர் போன்ற கிராமங்களில் இவ்வாறான போலியான மாதிரி வாக்குச் சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளது.

குறித்த கிராமங்களில் உள்ள வீடுகளுக்குச் செல்லும் போலியான வாக்குச் சீட்டுக்களை விநியோகிப்பவர்கள் வாக்குச் சீட்டில் உள்ள 7 ஆவது சின்னமான யானைக்கு புள்ளடி இட்டு விருப்பு இலக்கங்களான 1 மற்றும் 9 ஆகிய இரு இலக்கங்களுக்கும் புள்ளடி இட்டு காட்டியுள்ளனர். குறித்த செயற்பாடுகளில் இளம் யுவதிகள் சிலர் செயற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த போலி வாக்குச் சீட்டினால் கிராம மக்கள் குழப்பத்திற்கு உள்ளாகியுள்ளனர். உண்மையான வாக்குச்சீட்டில் 3ஆவது சின்னமாக இலங்கை தமிழரசுக்கட்சியின் வீட்டுச் சின்னம் காணப்படுவது வழமை. ஆனால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்களை குழப்பும் வகையில் குறித்த போலி மாதிரி வாக்குச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015

[தேர்தல் மாவட்டம் - வன்னி]



விஜயரட்ணம் சுரேந்தர்

(சுரேன்)




X

6

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)


# கூட்டமைப்பின் சமஷ்டியை ஏற்றுக்கொண்டாரா ரணில்?

## நெருப்பு எடுக்கிறார் திஸ்ஸ



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ள சுயாட்சி கோரிக்கையை மறைமுகமாக ஏற்றுக் கொண்டுள்ள பிரதமர் ரணில் விக கிரமசிங்க, அதுகுறித்து பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் என முன்னாள் அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

சமஷ்டி உணர்வை நாட்டு மக்களிடையே ஏற்படுத்திவரும் ரணில் விக்கிரமசிங்க, மக்கள் சமஷ்டியா? அல்லது ஐக்கிய இலங்கையா? என்பது தொடர்பில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் மக்களே தீர்மானிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் அண்மையில் வெளியிடப்பட்டது. அதன் முகப்பிலேயே சம்பந்தனின் புகைப்படத்துடன் சமஷ்டி தீர்வுக்கானது என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது.

சுயாட்சி முறை என்பது ஐக்கிய இலங்கைக்குள் வழங்கப்படும் விடயமல்ல. இந்த் நிலையில் சமஷ்டி கோரிக்கையை முன்வைத்திருக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து தேசிய அரசாங்கத்தை உருவாககுவது தொடர்பில் நேரடியாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிக்காவிட்டாலும், மறைமுக உணர்வை அவர் ஏற்படுத்தி வருகின்றார்.


கூட்டமைப்புடன் அவ்வாறு ஒன்றிணைந்து அரசாங்கத்தை உருவாக்குவதென்றால் அவர்கள் முன்வைத்திருக்கும் கோரிக்கைகளையும் ஏற்றுக் கொள்ள நேரிடும்.

அதாவது, வடக்கு, கிழக்கு இணைப்பு கோரிக்கை, அதியுயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றும் கோரிக்கை, வடக்கிலிருந்து இராணுவ முகாம்களை அகற்றும் கோரிக்கை, மீள்குடியேற்றம் குறித்த கோரிக்கை, மனித உரிமைகள் பேரவையின் போர்க் குற்றச்சாட்டு விசாரணை மற்றும் விடுதலைப் புலி உறுப்பினர்களை நிபந்தனையின்றி விடுதலை செய்யுமாறான கோரிக்கை என்பவற்றை ஏற்றுக் கொண்டே பிரதமர் ரணில் தேசிய அரசாங்கத்தை உருவாக்க ஒப்பந்தம் செய்துகொண்டதாக அறிய முடிகிறது.

இது குறித்து அவர் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கையை ஏற்பதா? இல்லையா? என்பது குறித்து பிரதமரும், ஐக்கிய தேசியக் கட்சியும் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்.

புதிய அரசியல் சீர்திருத்தத்தை ஏற்படுத்துவதாகவும்,



ஐக்கிய இலங்கைக்குள் அதிகூடிய அதிகாரப் பரவலை வழங்குவதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளது. எனினும் ஐக்கிய இலங்கைக்குள் எவ்வாறு அதிகூடிய அதிகாரப் பரவலை வழங்க முடியும்?

எனவே சமஷ்டி தேசத்திற்கு செல்லும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவின் அரசாங்கத்திற்குச் செல்வதா? அல்லது முப்படையினரால் மீட்டெடுக்கப்பட்ட இந்த நாட்டை ஐக்கியத்துக்குள் கொண்டுசெல்வதா? என்பது குறித்து எதிர்வரும் 17ஆம் திகதி மக்களே முடிவெடுக்க வேண்டும் என்றார்.

# பிரசார நிகழ்வில் கத்திக்குத்து

## ஒருவர் மரணம்

ஐக்கிய தேசியக் கட்சியின் பதுளை மாவட்ட வேட்பாளர்கள் இருவர் இணைந்து பதுளை - அட்டாம்பிட்டிய பகுதியில் ஏற்பாடு செய்திருந்த இசை நிகழ்வின் போது, ஆதரவாளர்களிடையே ஏற்பட்ட மோதலில் கத்திக்குத்துக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் பலியாகியுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

இந் நிகழ்வில், கலந்து கொள்ள வந்த இரு தரப்பு ஆதரவாளர்களிடையே ஏற்பட்ட வாக்குவாதம் மோதலாக மாறியுள்ளது. இதன்போது, பீ.எம்.இசாரஉதயங்க என்ற 18 வயதுடைய இளைஞன் கத்திக்குத்துக்கு இலக்காகியுள்ளார்.

குறித்த நபர் அட்டாம்பிட்டிய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின்பேரில் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் அப்பகுதியின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

**(07)** கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க

பலமாடுகளை ஒன்றாகப் பிணைத்து சூடு மிதிப்பதன் அழகைப்பார்த்து மகிழலாம். இக்காலத்தில் இயந்திரங்களால் சூடு அடிக்கின்றார்கள். சூடு மிதித்த பின் பதரை நீக்கி நெல்லை வீட்டிற்குக் கொண்டு செல்வார்கள் தமது தேவைக்கு ஏற்றவாறு வைத்துக் கொள்வார்கள் மீதியை விற்றுக்கிடைக்கும் பணத்தினைக் கொண்டு தமக்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொள்வார்கள்

01. இந் நிகழ்ச்சியில் எதனைப் பார்த்து மகிழலாம்? ........................
02. இக்காலத்தில் எதைக் கொண்டு சூடு மிதிக்கின்றார்கள்? ........................
03. பதர் என்றால் என்ன? ........................
04. தமக்குத் தேவையான பணத்தினை எவ்வாறு பெறுகின்றார்கள்? ........................
05. ஒன்று என்பதன் எதிர்ச்சொல் யாது? ........................
06. மேலே தரப்பட்ட பந்தி எத்தொழில் செய்வோரைப்பற்றி குறிப்பிடுகின்றது? ........................
07. மகிழ்ச்சி என்பதன் ஒத்தசொல் யாது? ........................
08. தரப்பட்டுள்ள சொல்லுடன் 'ே' சேர்த்து சொல்லை ஆக்கி வெற்றிடத்தில் எழுதுக?
    01. சாலை ........................  02. பார் ........................

**(08)** பிழைகளைத் திருத்தி எழுதுக

01. மகிளலாம் ........................  02. உளவர்கள் ........................

03. விளையும் பயிரை முளையில் தெரியும் என்பதன் கருத்தினை எழுதுக? ........................

**(09)** சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக

01. இறங்கினார் / மேடையை / அதிபர் / வீட்டு

........................

02. கற்க / சிறுவர்கள் / வேண்டும் / கல்வி

........................

**நேற்று பிரசுரமாகிய வினாக்களுக்கான விடைகள்**

(01) 01. காலைக்காட்சி 02. சூரியன் உதிப்பதை 03. செக்கச்சிவந்த 04. கதிரவன், தாமரை 05. சூரியன் மறைந்து செல்லல் 06. தினமும் 07. நாயகி 08. மலர்தல் 09. cloud 10. எனக்கு (02) 01. நான் நேற்று பாடசாலைக்கு போனேன் 02. நானும் தங்கையும் பாடசாலைக்குச் சென்றோம் 03. பறவை தனது சிறகுகளால் பறந்தது 04. பசுக்கள் கன்றுக்கு பால் கொடுத்தது 05. இன்று நித்திய கல்யாணி பூத்துக்குலுங்கியது 06. நேற்று தொடர்ந்து இடிமின்னலுடன் மழை பெய்தது (03) 01. சிறிய சிறிய 02. குமுறிக்குமுறி 03. உயர உயரப் 04. சுற்றிச்சுற்றி 05. வண்ண வண்ண
(04) 01. எதிர்காலத்தில் இருப்பதை ஒருவரின் செயல் மூலம் அறிந்துகொள்ளலாம் 02. ஒன்றைப் பற்றி தெரியாமல் முன்நிற்க கூடாது 03. கோபத்தில் எடுக்கும் முடிவுகள் தவறாக முடிதல் 04. எதுவும் அளவுக்கு மிஞ்சி ஆசைப்படாது இருத்தல் 05. சிறு வயதில் பழகும் சாகும் வரை மாறாது (05) 01. ண் 02. ல 03. லை 04. ணை 05. ழ் 06. ழ (06) 01. கடல் 02. பொருட்கள் 03. பட்டினி 04. பட்சி 05. வனம் 06. ஆராய்தல், சொல், (07) 01. 1 இரவு 02. மறைதல் 02. 1. நிறை + குடம் 02. நெல் + கதிர் (08) 01. 1 02. 2 03. 1 04. 2 05. 2
(09) 01. தேன் சுவையும் சத்தும் மிக்க பொருளாகும் 02. மாமிசங்களிலும் பார்க்க சைவஉணவே சிறந்த உணவு 03. வீட்டின் முன் முச்சக்கரவண்டி வந்து நிற்கும் சத்தம் கேட்கிறது 04. இன்சுலின் குறைபாடே நீரிழிவு நோய்க்கு காரணம் 05. புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்தால் தேசிய பாடசாலைக்கு செல்லலாம் (10) 01. 1 02. 1 03. 3 04. 1 05. 2 06. 1 07. 3 08. 2 09. 2 10. 3 11. 3 12. 2 13. 3 14. 2 15. 3 16. 2 17. 4 18. 4 19. 1

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



## தரம் - 3 பரீட்சை முன்னோடி - 2015

பகுதி - I
1 மணி 15 நிமிடம்



# கல்வி முரசு

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

**(01)** பின்வரும் கடிதத்தினை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க

கடற்கரை வீதி,
சிலாபம்,
01.08.2015

அன்புள்ள தம்பிக்கு,

வணக்கம். நான் நலம் நீயும் நலமாக இருப்பாய் என்று நம்புகின்றேன்.

நான் அனுப்பிய சிறுவர் நூல்களைப் படித்து விட்டாயா? படித்திருப்பாய் என்று நம்புகின்றேன். நீ எல்லா நூல்களையும் வாசிக்காதே தெரிவு செய்து நல்ல நூல்களை வாசி. மூடநம்பிக்கை ஊட்டும் கதை நூல்களால் பயனில்லை. மனிதன் விண்ணில் சாதனை படைத்து விட்டான். செயற்கைத் தோலைக் கண்டுபிடிக்கும் அளவுக்கு விஞ்ஞானம் வளர்ந்து விட்டது. எனவே மூடநம்பிக்கைகளுள் மூழ்கி விடாதே. கனவு காண். எதிர்காலத்தில் எப்படி வர வேண்டும் என்று தோல்வியைக் கண்டு கலங்காதே தோல்விதான் வெற்றிக்கு முதற்படி என்பதை மறவாதே மீண்டும் அடுத்த கடிதத்தில் சந்திக்கின்றேன்

நன்றி

இப்படிக்கு
அன்புச்சகோதரன்
செ.உமாகரன்

01. நாம் எப்படியான நூல்களை வாசிக்க வேண்டும்? ........................
02. மனிதன் எதைக் கண்டு பிடிக்கும் அளவுக்கு விஞ்ஞானம் வளர்ந்து விட்டது? ........................
03. எமது கனவு எப்படியானதாக இருக்க வேண்டும்? ........................
04. நாம் எப்படியான நூல்கள் வாசிப்பதை தவிர்க்க வேண்டும்? ........................
05. நாம் எதைக்கண்டு கலங்கக் கூடாது? ........................
06. வெற்றியின் முதற்படி எது என இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது? ........................
07. நாம் எதை நம்பக்கூடாது? ........................
08. இக்கடிதம் யாரால் யாருக்கு எழுதப்பட்டுள்ளது? ........................
09. தன்மைப் பெயர் ஒன்றை எழுதுக? ........................
10. புத்தகங்கள் என்பதன் ஒத்தசொல்லை எழுதுக? ........................

**(02)** படங்களுக்குரிய ஆங்கிலச்சொற்களை எழுதுக

01.  ................  02.  ................

**(03)** படங்களுக்குரிய சிங்களச்சொற்களை எழுதுக

01.  ................  02.  ................

(04) இடைவெளி நிரப்புக

01. பசு கதறும் என்பது போல யானை ..........

02. மாவின் இளையது கன்று போல வாழையின் இளையது ..........

03. கிளி பேசும் என்பது போல மயில் ..........

04. பணம் என்பது பிணம் எனிபது போல தனம் ..........

05. 123 என்பது 312 எனின் 421 ..........

06. பூ என்பது மலர் எனின் பூமி ..........

(05) சரியான விடையின் கீழ் கோடிடுக

01. யானை விரும்பி உண்ணும் உணவு
1) தினை 2) புல் 3) கரும்பு

02. மீனின் இளையது
1) குஞ்சு 2) குட்டி 3) பேத்தை

03. பூக்களில் உள்ள தேனை உறிஞ்சாத பிராணி
1) வண்டு 2) தேனீ 3) மண்புழு

04. வெள்ளை நிறப்பூ
1) கனகாம்பரம் 2) பூவரசம்பூ 3) கொய்யாப்பூ

05. மிகக்குளிரான வேளையில் அணிய வேண்டிய ஆடை
1) கம்பளி 2) பட்டு 3) பருத்தி

06. கொடித்தாவரம் அல்லாதது
1) வெற்றிலை 2) மிளகு 3) துளசி

07. விபத்துக்கள் நடைபெறும் சந்தர்ப்பம் அல்லாத ஒன்று
1) விளையாடுதல் 2) தியானம் செய்தல் 3) வாகனம் ஓட்டுதல்

08. பலாப்பழத்தின் உள்ளீடு
1) சுளை 2) சதை 3) வழுவல்

09. இலங்கையின் தேசிய மரம்
1) நாகலிங்கம் 2) நாகமரம் 3) நாவல்மரம்

10. ஆணிவேர் உள்ள தாவரம்
1) வேம்பு 2) பனை 3) கமுகு

11. மேசைத்தட்டொன்றைச் செய்வதற்கு ஏற்ற தையல்
1) கம்பளித்தையல் 2) சாங்கிலித்தையல் 3) பெருநூலோடி

12. வளையத்தினைப் பயன்படுத்தி விளையாடும் விளையாட்டு ஒன்று
1) கயிறடித்தல் 2) சமனிலை ஓட்டம் 3) வளையத்தை இடுப்பில் சுழற்றுதல்

13. கலப்புணவினால் உடலுக்கு ஏற்படாதது
1) சீரான உடல் வளர்ச்சிகிடைக்கும் 2) நோய்களிலிருந்து பாதுகாப்பு கிடைக்கும்
3) ஒரு போசாக்குள்ள உணவு அதிகமாகக் கிடைக்கும்

14. உணவின் சுவையூட்டிகளில் ஒன்று
1) உப்பு 2) நீர் 3) பாண்

15. வீடுகளில் கழிவுநீரை வெளியேற்ற சிறந்த வழி
1) வாய்க்கால் வெட்டுதல் 2) வடிகால் அமைத்தல்
3) குழிதோண்டல்

16. நீரில் கரையும் பதார்த்தம்
1) தேங்காயெண்ணெய் 2) மண்ணெண்ணெய்
3) வினாகிரி




17. நகரப்புற மக்களுக்கு நீரை வழங்கும் நிறுவனம்
1) தேசிய நீர் வடிகால் அமைப்புச்சபை 2) நகரசபை 3) பிரதேசசபை

18. பேருந்து வண்டியில் பயணம் செய்யும் போது சட்டவிரோதமான செயல்
1) மதகுருமார் அமரும் ஆசனத்தில் அமருதல்
2) பேருந்து வண்டியில் நின்று கொண்டு பயணம் செய்தல்
3) பயணச்சீட்டின்றி பயணம் செய்தல்

19. இயற்கை அழிவுகளில் ஒன்று? 1) காடழித்தல் 2) வீதிவிபத்து 3) சுனாமி

20. தச்சன் ஒருவனால் பயன்படுத்தப்படும் உபகரணம்
1) தூக்குக்குண்டு 2) சாந்தகப்பை 3) துறப்பணம்

21. 


இவ்வுருவின் சமச்சீர் அச்சினை வரைக

22. 999 என்பதைச் சொற்களில் எழுதுக? ..........

23. ரூபா 10.00 இல் எத்தனை 50 சத நாணயங்கள் உண்டு ..........

24. இவ்வட்டவணைப்படி நிரல் வரைபை வரைந்து நிழற்றுக

| நாள் | விற்ற பழங்கள் |
|---|---|
| 1ம் நாள் | 20 |
| 2ம் நாள் | 10 |
| 3ம் நாள் | 05 |




25. இவ்வுருவில் இடைவெளியை நிரப்புக

| | | | |
|---|---|---|---|
| A | 8 | C | ...... |
| 4 | B | 16 | ....... |

26. எனது வயதின் இரு மடங்குடன் 10ஐக் கூட்டினால் எனது அம்மாவின் வயதாகும். அம்மாவின் வயது 34 ஆகும் எனின் என்னுடைய வயது என்ன?

..........

27. மூன்று குடங்களில் முதலாவது குடத்தில் அரைவாசி நீரும் இரண்டாவது குடத்தில் முக்கால்வாசி நீரும் மூன்றாவது குடத்தில் கால்வாசி நீரும் உள்ளன காகம் ஒன்று மூன்றாவது குடத்திற்குள் 15 கற்களைப் போட்டு குடத்தினை நிரப்பியது எனின் முதலாவது குடத்தினை நிரப்ப எத்தனை கற்கள் போட வேண்டும்?

..........


(06) 'வாசிப்பதனால் ஏற்படும் நன்மைகள்" என்ற தலைப்பில் மூன்று வசனத்தைக் நான்கு சொற்களுக்குக் குறையாத எழுவாய், பயனிலையுடன் எழுதுக?

01. ..........

02. ..........


03. ..........

# தேர்தல் களம் 2015



## மக்களின் வாக்குகளை அபகரிப்பவர்கள் அவர்களின் நலனில் அக்கறை காட்டுவதில்லை

### ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் வி.கே.ஜெகன்



தேசியத்தின் பெயரால் வாக்குகளை அபகரிக்க முயல்பவர்கள் மக்கள் எதிர்கொள்ளும் அவலங்களுக்கு நிரந்தர தீர்வை ஒரு போதும் விரும்புவதில்லையென ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் வி.கே.ஜெகன் தெரிவித்துள்ளார்.

மானிப்பாயில் நேற்றுமுன் தினம் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

மக்களது வாக்குகளை சூறையாடுவதற்காக தேர்தல் காலங்களில் மட்டும் மக்கள் வாழ்விடங்களுக்குள் அலைந்து திரியும் வேட்பாளர்களை பார்க்கும் போது வெட்கமாக உள்ளது. வாழ்வியலை தொலைத்துவிட்டு போராடிக கொண்டிருந்த தமிழ் மக்களை அரசியலின் பகடைக் காய்களாக வைத்து தமது சுய நலன்களை மேம்படுத்துவதனால் தமிழ் மக்களது உரிமைகளை வென்றெடுத்துவிடமுடியாது.

ஒவ்வொரு தேர்தல் காலத்திலும் தமிழ் மக்களது வாக்குகளை தேசியம் பேசி பெற்று வரும் அன்றைய கூட்டணியினரும் சரி இன்றைய கூட்டமைப்பினரும் சரி தமிழ் மக்களது பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வுகள் எதனையும் பெற்றுக் கொள்வதற்கு விரும்புவதில்லை என்பது தான் யதார்த்த நிலை. ஆனால் தமிழ் மக்கள் நீண்ட காலமாக வாக்குகளை அவர்களுக்கு வாரிக்கொடுத்து தமது வாழ்வியலை பறிகொடுத்த பரிதாப நிலையைத்தான் பெற்றுள்ளனர்.

கொள்ளையடிப்பவர்களையும், வ்ராப்பு பேசிப்பேசி தமிழ் இளைஞர்களை பலிக்கடா வாக்குபவர்களையும், மக்களை வறுமையிலும் ஏமாற்றி வியாபாரம் நடத்தி தமது வங்கிக்கணக்குகளை நிரப்புபவர்களையும், தமிழ் இளைஞர்களை கொததுக் கொத்தாக கொன்று போட்டவர்களையும் இணைத்து கூட்டமைப்பு அமைத்து தமிழருக்கு உரிமை பெற்றுத்தருவதாக மார் தட்டித் திரிகின்றனர் கூட்டமைப்பினர். இவர்களை தொடர்ந்தும் நம்பி நாடாளுமன்றுக்கு அனுப்புவதற்கு தமிழ் மக்கள் என்ன சுறணையற்றவர்களா? மாற்றத்தை காண்பதற்காகவும் புதிய தலைமையை தேடுவதற்காகவும் தமிழ் மக்கள் எதிர்வரும் தேர்தலை பயன்படுத்திக்கொள்ள முடிவு செய்து விட்டனர்.

மக்களுக்காகவும் அவர்களது தேவைகளை பூர்த்தி செய்வதற்காகவும் உரிமைகளை மீட்பதற்காகவும் ஜனநாயக ரீதியில் போராடிக்கொண்டிருப்பவர்கள் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர் மட்டும்தான் என்ற யதார்த்த உண்மையை மக்கள் இன்று நன்கு புரிந்துள்ளமையால் எதிர்வரும் பொதுத்தேர்தலில் எமது செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கு தமிழ் மக்களது அரசியலதிகாரம் கிடைக்கவுள்ளது. அந்த அதிகாரத்தை மேலும் வலு வாக்கிக் கொள்ள அனைத்து தமிழ் மக்களும் தமது பங்களிப்பை செய்து அவரது பலத்தை தெற்குடன பேரம் பேசுமளவுக்கு கொடுக்க வேண்டும் என்பதே எமது வேண்டுகோளாக உள்ளது என்றார்.

## பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் வாழ்வியலை மேம்படுத்துவதே திட்டம்

### முதன்மை வேட்பாளர் டக்ளஸ் தேவானந்தா உறுதி



பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் வாழ்வை வளம்படுத்துவதற்கான திட்டங்களை முன்னுரிமைப்படுத்தவுள்ளதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள அமரா அமைப்பின் ஒன்றுகூடல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், யுத்தம் மற்றும் ஏனைய காரணங்களால் கணவனை இழந்த நிலையில் தமது குடும்பங்களை நிர்வகிக்கும் பெண்களின் ஒளிமயமான எதிர்காலம் உறுதிசெய்யப்பட வேண்டியது அவசியமானது.

அந்தவகையில், கடந்த காலங்களில் எமது கட்சியின் ஊடாகவும் நாம் வகித்துக் கொண்ட அமைச்சுக்களுக்கூடாகவும் பல்வேறு பட்ட செயற்றிட்டங்களை பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கு வழங்கியுள்ளோம்.

குறிப்பாக, சுயதொழில் வாய்ப்பு, வங்கிகளின் ஊடாக இலகு கடன் திட்டம், சுய தொழில்களுக்கான தொழிற்துறைசார்ந்த உபகரணங்கள் வழங்கல் உள்ளிட்ட பல தேவைகளை நிறைவு செய்துள்ளோம்.

இவற்றுக்கு ஊடாகவே பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் ஒளிமயமான எதிர்காலத்தை உறுதி செய்ய முடியும்.

இந்நிலையில் எதிர்காலத்தில் எமக்கு அரசியல் பலம் கிடைக்கும் பட்சத்தில் இக் குடும்பங்களின் பொருளாதாரம் மட்டுமன்றி வாழ்வாதாரத்தையும் நிச்சயம் மேம்படுத்திக் கொள்ள முடியுமென்றும் சுட்டிக்காட்டினார்.

இதனிடையே பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் செயலணியால் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா விடம் செயலணியின் தேவைப்பாடுகள பிரச்சினைகள் தொடர்பிலான மனுவொன்றும் கையளிக்கப் பட்டது.

இதன்போது ஈ.பி.டி.பியின் வேட்பாளர்களான இரா.செல்வ வடிவேல், திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் உடனிருந்தனர்.

## காணி உரிமம் இன்மையால் அரசின் உதவிகள் எதனையும் பெற முடியாத அவலம்

### மக்கள் சந்திப்பில் பா.சீவரத்தினம் சுட்டிக்காட்டு

எண்பதுகளின் ஆரம்பத்திலிருந்து விடுதலை அமைப்புகளால் ஏற்படுத்தப்பட்ட குடியேற்றங்கள் இன்றும் அடிப்படை வசதிகளை பெற்றுக் கொள்ள முடியாத சூழலிலேயே இருந்து வருவதாக ஈ.பி.டி.பி.யின் தேசிய அமைப்பாளரும் வேட்பாளருமான பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

கோப்பாய் கரந்தன் பகுதியில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நீண்ட காலமாக வறுமைக் கோட்டின் கீழ் வாழும் இம் மக்களின் வாழ்க்கை நிலைமைகளை கவனத்திலெடுத்து உரையாற்றிய பசுபதி சீவரத்தினம் மேலும் தனது உரையில்,

வடக்கு கிழக்கில் தமிழ்த் தேசிய விடுதலை அமைப்புக்கள உருவாவதற்கு முன்பிருந்தே இந்த மக்கள் தமக்கான சொந்த நிலங்கள் எதுவும் இல்லாத நெருக்கடியை எதிர்கொண்ட போது எவ்வித பயன்பாடும் இல்லாத நிலையில் இருந்து வந்த அரச மற்றும் தனியார் காணிகளில் இந்த மக்கள் விடுதலை அமைப்புக்களால் குடியேற்றப்பட்டார்கள்.

இப்போது சுமார் 30 வருடங்கள் கடந்து விட்ட நிலையிலும் குடியிருக்கும் இம் மக்களின் காணிகளுக்கு காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படாமையால் இம் மக்கள் தமக்கான அரசின் உதவிகள் எதனையும் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் வாழ்ந்து வருகின்றார்கள்

குறிப்பாக அச்சுவேலி, தோப்பு, செல்வநாயகபுரம், மயிலங்காடு, கோப்பாய், செல்வபுரம் போன்ற இடங்களை உள்ளடக்கி ஏழாயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் இன்றும் தமக்கான காணி உரிமம் எதனையும் பெற முடியாத நிலையிலேயே வாழ்ந்து வருகின்றன

வீதிகள் எதுவும் செப்பனிடப்படாத நிலையில் வீட்டுத் திட்டம் , பாடசாலைகள் தரம் உயர்த்தப்படாத நிலை, குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை பெற்றுக்கொள்வதில் இம் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே அடிப்படை பிரச்சினைகளை அறிந்து தீர்ப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ)

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015

(தேர்தல் மாவட்டம் – வன்னி)



சுந்தரம் குமாரசாமி



X 7

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# வலி சுமந்த எனக்கு கூட்டமைப்பு ஆதரவு தரவில்லை

## வேட்பாளர் சாந்தி குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யுத்தவலிகளை சுமந்த பெண் என்ற வகையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தனக்கு ஒத்துழைப்பு தரவில்லை என கூட்டமைப்பின் சார்பில் வன்னியில் போட்டியிடும் வேட்பாளரான சி.சாந்தி தெரிவித்துள்ளார்.

வவுனியாவின் தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் ஒரு பெண் வேட்பாளராக யுத்த சுமைகளை சுமந்தவள் என்ற வகையில் கூட்டமைப்பில் போட்டியிடுவதாகக் குறிப்பிட்ட அவர்,

தனது பிரசார நடவடிக்கைகளுக்கு தமிழரசுக் கட்சி எனக்கு முழு ஒத்துழைப்பு தருவதாகவும், குறிப்பாக வடமாகாண சுகாதார அமைச்சர் மற்றும் வன்னியில் போட்டியிடும் வேட்பாளர் றோய் ஜெயக்குமார் தனக்கு ஒத்துழைப்பு தருவதாகவும் கூறியுள்ளார்.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவுவழங்கவில்லை. பெண் வேட்பாளர் போட்டியிடுகின்றேன். அதேவேளை யுத்தத்தில் .பாதிக்கப்பட்டவள் அரச அதிகாரியாக இருந்தவள் என்பதை அவர்கள் நினைவில் கொள்ளவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

தனக்கு செல்வாக்கு உள்ள இடத்தில் அவர்கள் கூட்டுச் சேர விரும்புகிறார்கள் எனக் குறிப்பிட்ட அவர்,

ஏனைய இடங்களுக்கு தன்னை அழைத்துச் சென்று அறிமுகப்படுத்த கூட்டமைப்பினர் தயாராகவில்லை எனவும் தனக்கு ஆதரவு அதிகரிப்பதை அவர்கள் பெரிதாக விரும்பவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.




# இலங்கைக்கு விசா வழங்கலில் மோசடி விசாரணைக்கு உத்தரவு

## இத்தாலிய அரசு அதிரடி

(கொழும்பு)

இத்தாலிய அரசாங்கத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட தொழில் வீசாக்களில் மோசடி இடம்பெற்றதாக வெளியான தகவல் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளுமாறு இத்தாலிய அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளதாக சண்டே ரைம்ஸ் ஆங்கில நாளிதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் கொழும்பில் உள்ள இத்தாலிய அரசினால் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து துஸ் பிரயோகங்கள் தொடர்பில் விசாரணை செய்து அறிக்கையை இத்தாலிய அரசாங்கத்துக்கு அனுப்பவுள்ளதாக கொழும்பில் உள்ள இத்தாலிய தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் நந்தபால அபேவிக்கிரமசூரியவுடன் இத்தாலிய பிரதித் தூதுவர் ஜியான்டொமெனிக்கோ இரண்டு மணித்தியால பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தியுள்ளார்.

எனினும் இச் சம்பவம் தேர்தலில் பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பதால், குறித்த தகவல்களை வெளியிடமுடியாது என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் தெரிவித்துள்ளதாக அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எச்சரிக்கை

(கொழும்பு)

வேகமாக வாகனம் செலுத்தும் சாரதிகள் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எதிர்கொள்ள நேரிடும் என பொலிஸ் அறிவித்துள்ளனர். இது நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் நடைமுறைக்கு வரும் என பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. அத்துடன் வேக விதிகளைப் பின்பற்றி வாகனங்களை செலுத்துமாறும் சாரதிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# துப்பாக்கியுடன் இளைஞர் கைது

(அம்பாறை)

அம்பாறை, உஹன பொலிஸ பிரிவுக்குட்பட்ட வரிப்பத்தான் சேனையில் துப்பாக்கி மற்றும் ஏழு தோட்டாக்களை வைத்திருந்ததாகக் கூறப்படும் 28 வயதுடைய ஒருவரை நேற்று ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், சந்தேக நபரிடமிருந்து துப்பாக்கியையும் ஏழு தோட்டாக்களையும் கைப்பற்றினர்.

பொதுமக்களிடமிருந்து கிடைத்த தகவலைத் தொடர்ந்து சோதனை மேற்கொண்டு சந்தேக நபரை கைதுசெய்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# உலக ஆதிவாசிகள் தினம் அனுஷ்டிப்பு



ஆதிவாசிகளின் சுகாதார பாதுகாப்பு தொடர்பான சேவைகளை பெற்றுக் கொள்வதை விரிவுபடுத்துதல் என்ற தொனிப்பொருளின் கீழ் இம்முறை ஆதிவாசிகள் தினம் நேற்று கொண்டாடப்பட்டது.

உலக சனத்தொகையில் ஐந்து வீத பிரதிநிதித்துவத்தை கொண்டுள்ள ஆதிவாசிகள் சுமார் 4000 மொழிகளை பயன்படுத்த கூடியவர்களாக காணப்படுகின்றனர்.

சர்வதேச ரீதியில் 70 நாடுகளில் 5000 இற்கும் அதிகமான ஆதிவாசிகள் காணப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் இயங்கும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் குறிப்பிட்டுள்ளது.

வறுமை, இடப்பிரச்சினை மற்றும் போசணைக் குறைபாடு என்பன ஆதிவாசிகள் எதிர்நோக்கும பிரதான பிரச்சினைகள் எனவும் அந்த நிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் வேடுவர்களாக வாழும் ஆதிவாசிகள் உலக ஆதிவாசிகளுக்கு மத்தியில் முக்கிய இடம் வகிக்கின்றமை ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

இலங்கைத் தீவில் ஆதிவாசிகளின் தலைவர் ஊருவருகே வன்னிலா வேடுவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறானதொரு நாள் அனைத்து ஆதிவாசிகளுக்கும் சகல சௌபாக்கியமும் பெற்றுக் கொள்ளக்கூடிய நாளாக அமைய வேண்டும் என இலங்கை ஆதிவாசிகளின் தலைவர் ஊருவருகே வன்னிலா வேடுவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015
(தேர்தல் மாவட்டம் - வன்னி)







ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)



காவேரி கலாமன்றத்தினால் நடாத்தப்பட்ட சமுதாய நாடகக் குழுவின நலமாக வாழ்வோம் கலை நிகழ்வு ஒடுகம் புலம் கிராமத்தில் நேற்று நடைபெற்ற போது... (90)

## மகிந்தவை...

பணம் கொடுத்தமைக்கான அனைத்து தகவல்களும் வெளிவந்துள்ளதாகவும் விரைவில் இது குறித்து வழக்குத் தொடரவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே சம்பிக்க ரணவக்க இவ்வாறு கூறியுள்ளார். போலி நிறுவனங்கள் மூன்றை உள்ளடக்கிய ராடா நிறுவனத்தின் பிரதானிகளான டிரான் அலஸ் மற்றும் எமில் காந்தன் ஆகியோரை பயன படுத்தி மேற்கொண்ட பரிவர்த்தனைகள் தற்போது வெளிவந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோல் வெளிநாடுகளிலுள்ள தீவிரவாதிகளுடன் தென்னாபிரிக்கா ஊடாக மேற்கொண்ட பரிவர்த்தனைகளையும் எதிர்காலத்தில் வெளியிட எதிர்பார்த்துள்ளதாக் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சுனாமியால்..

அச்சிறுவன் தற்போது தம்புள்ளையில் உள்ள அளவை என்னும் இடத்திலிருந்து பௌத்த பிக்கு ஒருவரின் பாதுகாப்பில் வாழ்ந்து வந்த வேளை பெற்றோரினால் இனங்காணப்பட்டுள்ளார்.

அனர்த்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் இடம்பெற்ற திடீர் இடப்பெயர்வுகளின் போதே தான் வழி தெரியாது மக்கள் கூட்டத்தோடு சென்று பெற்றோரைத் தொலைத்ததாகவும் சிறுவன் தெரிவித்தான். சிறுவனின் பெற்றோர் காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாட்டினை பதிவு செய்திருந்தமையால் அவ் விபரங்களைக் கொண்டு மாங்குளம் சிறுவர் நன்னடத்தைப் பிரிவினரால் இனங்காணப்பட்டுள்ளார். (125)

## எக்னெலி..

குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மேற்கொண்ட அவசர சுற்றிவளைப்பின் போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

எக்னெலிகொடவின் காணாமற் போதல் சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் திருகோணமலை, வெருகல் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் சில காலம் புலிகள் அமைப்பிலும் உறுப்பினராக செயற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இவர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு புனர்வாழ்வளிக்கப்பட்டதன் பின்னர் இராணுவ புலனாய்வுத்துறையில் கடமையாற்றியுள்ளனர். இவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின் போது கிடைக்கப்பெற்ற தகவல்களை வைத்தே இராணுவ மேஜர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார். இச்சம்பவத்துடன் தொடர்புடைய இன்னும் பலர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர்கள் விரைவில் கைது செய்யப்படுவார்கள் எனவும் பொலிஸார் மேலும் அறிவித்துள்ளனர்.

# கட்டைக்காடு மீனவர்களின் கரைவலைகள் அறுப்பு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு மீனவர்களின் கரைவலை மற்றும் இதர வலைகளை இந்திய மீனவர்களும், தென்னிலங்கை மீனவர்களும் அறுத்தெறிவதாகவும், கடந்த மூன்று நாட்களில் மாத்திரம் 8 மீனவர்களுடைய சுமார் 7 இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் இவ்வாறு அறுக்கப்பட்டுள்ளதாக கட்டைக்காடு மீனவர் சங்கத் தலைவர் அருளப்பு யோசப் எட்வேர்ட் கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

கடலட்டை பிடிப்பில் ஈடுபடும் தென்னிலங்கை மீனவர்கள் எமது பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து, எமது வலைகளை அறுத்து எறிகின்றனர். இதேவேளை றோலர்களில் இந்திய மீனவர்கள் கரை வரையில் வந்து எமது மீனவர்களின் வலைகளை அறுக்கின்றனர்.

முன்னர் கடற்படையினருக்கு அறிவித்தவுடன் அவர்கள் சென்று இந்திய மீனவர்களைக் கைது செய்து வந்தனர். ஆனால் தற்போது நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும் காலம் என்பதால் கடற்படையினர் மீனவர்களைக் கைது செய்ய முன்வரவில்லை.

கடந்த புதன்கிழமை இரவு 6 மீனவர்களுடைய வலைகளை அறுத்தெறிந்த இந்திய மீனவர்கள், றோலர்களை கரைக்கு கொண்டு வந்து ஹோன் அடித்துவிட்டுச் சென்றனர். 100 இற்கும் அதிகமான றோலர்கள் எமது கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைவதால் எமது மீனவர்கள் தொழிலுக்குச் செல்லாமல் இருக்கின்றனர்.

தென்னிலங்கை மீனவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலையில் இரண்டு மீனவர்களுடைய வலைகளை அறுத்துள்ளனர். இவற்றைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் நாங்கள் இருக்கின்றோம். தேர்தல் நடைபெறுவதனால் உரிய தரப்பினரிடம் சென்று முறைப்பாடு தெரிவிக்க முடியவில்லையென அவர் மேலும் கூறினார்.

## போர்க்...

முறைக்குள் கொண்டு உள்ளக விசாரணையாக மாற்ற அரசாங்கம் முற்பட்டுள்ளது.

ஆனால தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு அதுவல்ல. போரில் ஈடுபட்டவர்களை விசாரணை நடத்த அனுமதிக்க முடியாது என்று கூறிய சுரேஸ் பிரேமசந்திரன், இனப் பிரச்சினைக்கான தீர்வு ஒன்று ஏற்படுகின்ற போதுதான், அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும் என்றும் கூறினார்.

இதேவேளை சர்வதேச விசாரணையை விட உள்ளக விசாரணையே சிறந்தது என்றும் அந்த உள்ளக விசாரணை சர்வதேச தரத்தில் நடைபெறும் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், யாழ். மாவட்ட வேட்பாளர், சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் அண்மையில் கூறியிருந்தார்.

இந்தநிலையில், உள்ளக விசாரணையை ஏற்க முடியாது என சுரேஷ் பிரேமசந்திரன் நேற்று கூறியமையானது மனித உரிமை மீறல்கள் தொடர்பாக எத்தகைய விசாரணையை மேற்கொள்ளவேண்டும் என்பது தொடர்பில் கூட்டமைப்பிற்குள் குழப்பமான நிலை நீடித்து வருவதையே காட்டுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அந்தக் காலத்தில் இடம்பெற்ற உயிரிழப்புக்களை போர்க்குற்றமாக ஏற்றுக்கொள்ளமுடியாதென அரசாங்கம் அண்மையில் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## இறுதி...

இது தொடர்பான முடிவுகளை எடுக்கவேண்டும், தற்போதைக்கு நாட்டின் சட்டங்களின் அடிப்படையில் செயற்படுவோம்.

பல்வேறு காரணங்களிற்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் கைதிகள் என தெரிவிக்கின்றது,

இவர்களில் சிலர் பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டவர்கள், ஏனையவர்களிற்கு எதிராக வழக்குகள் உள்ளன,

சிறையில் இருப்பவர்கள் பாரிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டவர்கள், அவர்கள் தமிழர்கள் என்பதற்காக நாங்கள் சட்டங்களை வேறு விதமாக பயன்படுத்த முடியாது, உதாரணத்திற்கு படுகொலை குற்றச்சாட்டு சுமத்தப்பட்டவர்களை நீதிமன்றத்தில் நாங்கள் விசாரணை செய்யவேண்டிவரும். அரசியல் அடிப்படையில் நாங்கள் அவர்களை விடுதலை செய்ய முடியாது. நாங்கள் அனைவருக்கும் சட்டங்களை இனரீதியிலான பாகுபாடின்றி நடைமுறைப்படுத்துகின்றோம்,

பாரிய குற்றச்சாட்டுகளில் ஈடுபட்டவர்களிற்கு நாங்கள் தமிழர்கள் என்ற அடிப்படையில் அரசியல் அடிப்படையில் விதிவிலக்களிக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



செ. ஸ்ரீராமச்சந்திரதாஸ்



X 9

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)


## மகிந்தவுக்கு...

இந்நிலையில் குறித்த மாவட்டத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள புலனாய்வு பிரிவு அதிகாரிகளிடம் அவர், மகிந்தவுக்கு ஆதரவு வழங்குமாறு அழுத்தம் கொடுத்துள்ளார்.

மேலும் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளிடம், விரைவில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் இணைந்த முன்னணி அரசாங்கம் ஒன்று உருவாக்கப்படும் எனவும் அவர் தெரிவித்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன.

தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைமையகத்தில் உள்ள மகிந்தவுக்கு நெருக்கமான முக்கிய அதிகாரி ஒருவரின் உதவியுடனே கபில ஹெந்தவிதாரண, குருநாகல் மாவட்டத்தில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ள தேசிய புலனாய்வு பிரிவு அதிகாரிகளின் பெயர் பட்டியலை பெற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுமந்திரனுக்கு...

க்கள் தீர்மானம் நிறைவேற்றியுள்ளன. வவுனியா கலைமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் புதிய மாக்சிச லெனினிச கட்சியின் ஏற்பாட்டில் இந்த தேர்தல் சாதிக்கப்போவது என்ன? என்ற கருப் பொருளில் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே சில சிவில் அமைப்புக்கள் இவ்வாறு தீர்மானித்துள்ளன.

வன்னியில் நடைபெற்றது இனப்படுகொலை தான் என தெரிவித்த சிவில் அமைப்பு பிரதிநிதிகள் சனல் - 4 இன் போர்க்குற்ற ஆதாரங்களை வெளிநாடுகள் ஆதரிக்கின்ற அதேவேளை சிங்கள கட்சிகள் கூட அதனை பொய் என நிரூபிக்க முடியாத நிலையில் உள்ளன. ஆனால் தமிழ் மக்களின் பிரதிநிதி என தன்னை காட்டிக் கொள்ளும் சுமந்திரன் சனல் - 4 போர்க்குற்ற ஆதாரத்தை பொய் எனவும் திரிபுபடுத்தப்பட்டுள்ளதாகவும் கூறி சிங்கள தலைவர்களை மகிழ்வித்துள்ளார்.

இதனை சிவில் அமைப்புக்களாகிய நாம் வன்மையாக கண்டிப்பதுடன் இன்று நடைபெறும் கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டத்தில் இது தொடர்பாக கேள்வி கேட்பது எனவும் சுமந்திரன் கலந்து கொண்டால் கறுப்புக் கொடி காட்டுவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## சுமந்திரனின்...

யாழ். மாவட்ட வேட்பாளர் சுமந்திரனினால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டை கெலும் மைக்ரே மறுத்துள்ளார்.

இலங்கையின் கொலைக்களம் என்ற ஆவணப்படத்தின் தயாரிப்பாளரான ஊடகவியலாளர் கெலும் மைக்ரே தனது டுவிட்டர் தளத்தில் இந்த விடயத்தைப் பதிவு செய்துள்ளார். சனல் - 4 தொலைக்காட்சியில் கெலும் மைக்ரே தெரிவித்த - கசிய விடப்பட்ட ஆவணம் திட்டமிடப்பட்ட ஒரு செயற்பாடு எனவும், பின்னர் அந்த சம்பவம் தொடர்பில் சில பகுதிகளில் மட்டுமே உண்மை இருக்கின்றது எனவும் சுமந்திரன் கடந்த தேர்தல் பிரசார மேடைகளில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், சனல் - 4 தொலைக்காட்சி வெளியிட்ட தனது செய்தியில் எந்த வகையான திரிவுபடுத்தலும் இல்லை என்றும், அந்தச் செய்தி நூறு வீதம் உண்மை என்றும் அவர் கூறியுள்ளார்.

கசிய விடப்பட்ட ஆவணம் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் சர்வதேச விசாரணை பற்றி குறிப்பிடவில்லை. ஆனால், அந்த விசாரணையைத் புறம்தள்ளுவதுதான் இங்கு பிரச்சினை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை, விசாரணையை மேற்கொள்ளும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம்தான் இந்த உள்ளக விசாரணையை வழிநடத்தும் எனத் தெரிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதாவது, ஜெனிவாவைப் புறம் தள்ளிவிட்டு நியூயோர்க் மற்றும் கொழும்பு ஐ.நா. அலுவலகங்கள் செயற்படுகின்றனவா எனத்தான் கேள்வி எழுப்புவதாகவும் கெலும் மைக்ரே தனது டுவிட்டர் பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# தற்போதைய அமைச்சரவையை தொடர்ந்தும் விரும்பும் ஜனாதிபதி



(கொழும்பு)

எதிர்வரும் 18 ஆம் திகதி தற்போதைய அமைச்சரவையை சந்திக்க வேண்டும் என்பதே தனது எதிர்பார்ப்பு என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளதாக சண்டே ரைம்ஸ் வார இதழ் தெரிவித்துள்ளது.

ரணில் விக்ரமசிங்க தலைமையிலான தற்போதைய அமைச்சரவையின் இறுதிக் கூட்டத்திலேயே அவர் இதனை கூறியுள்ளார்.

இது தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் தற்காலிக அரசாங்கமும் அதன் அமைச்சரவையுமே பதவியில் இருக்கின்றது. இந்த அரசாங்கத்தின் இறுதி அமைச்சரவைக் கூட்டம் கடந்த புதன் கிழமை கூடியது. ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

தேர்தல் பணிகளில் ஈடுபட்டுள்ளதால், அமைச்சர்கள் பலர் இந்த கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. சிலர் மாத்திரமே சமுகமளித்திருந்தனர். அமைச்சரவைப் பேச்சாளர் என்பதால், அமைச்சர் ராஜித சேனாரத்ன தொடர்ந்தும் அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கேற்று வந்தார்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் அமைச்சரவைக் கூட்டங்களுக்கு தொடர்ந்தும் சமுகமளித்து வந்தார்.

இறுதியான அமைச்சரவைக் கூட்டம் எவ்விதமான சுவாரஸ்யமும் இன்றி முடிவடைந்தது. அமைச்சரவைக் கூட்டத்தின் இறுதியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உணர்ச்சிபூர்வமான உரையை நிகழ்த்தினார்.

அனைவரும் வெற்றி பெற வேண்டும் என பிரார்த்திக்கின்றேன். எதிர்வரும் 18 ஆம் திகதி இதே அமைச்சரவையை சந்திக்க வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு.

ஜனவரி 8 ஆம் திகதி பெற்ற வெற்றியை முன்னோக்கி கொண்டு செல்லக் கூடிய அமைச்சரவை தெரிவாக வேண்டும் என பிரார்த்திக் கின்றேன். அனைவருக்கும் வாழ்த்துக்கள் எனக் கூறி விட்டு ஜனாதிபதி தனது உரையை முடித்துக் கொண்டார் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கருக்கலைப்பு மாத்திரைகள் கொண்டு வந்தவர் கைது



சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட ஒருதொகை மருந்துகளுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சென்னையில் இருந்து வந்த இலங்கையர் ஒருவரே இவ்வாறு நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளதாக, சுங்க ஊடகப் பேச்சாளர் லேஸ்லி காமினி குறிப்பிட்டுள்ளார்.

மேலும் சந்தேகநபர் வசமிருந்து கருக்கலைப்புக்காக பயன்படுத்தும் மாத்திரைகள் உள்ளிட்ட பெருந்தொகை மருந்துகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவற்றின் பெறுமதி 13 இலட்சத்து 34,000 ரூபா எனவும் சுங்க ஊடகப் பேச்சாளர் சுட்டிக்காட்டினார்.

சந்தேகநபர் காத்தான்குடி பகுதியைச் சேர்ந்த 44 வயதான ஒருவர் எனத் தெரியவந்துள்ளது.

சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை விமான நிலைய சுங்கப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# இடம்பெயர்ந்தவர்களுக்கு 19 வாக்குச்சாவடிகள்

(கொழும்பு)

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய தேர்தல் தொகுதிகளில் இடம்பெயர்ந்துள்ள 9537 வாக்காளர்களுக்கு புத்தளம் மாவட்டத்தில் 17 வாக்குச் சாவடிகளும், அநுராதபுரம் மாவட்டத்தில் 2 வாக்குச் சாவடிகளும் அமைக்கப்படவுள்ளதாக தேர்தல்கள் செயலகம அறிவித்துள்ளது.

மன்னார் தேர்தல் தொகுதியில் 8781 வாக்காளர்களும், முல்லைத்தீவு தேர்தல் தொகுதியில் 209 வாக்காளர்களும், வவுனியா தேர்தல் தொகுதியில் 547 வாக்காளர்களும் மேற்படி இரு மாவட்டங்களிலும் வாழ்ந்து வருவதாகவும் தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாக்காளர்களுக்கு வாக்களிக்கும் வசதிகளை செய்து கொடுப்பதற்காக வேண்டி இவ்வாறு 19 வாக்குச் சாவடிகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாகவும் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். முஹம்மட் குறிப்பிட்டுள்ளார்.

# புலமைப்பரிசில் பரீட்சையில் 3 இலட்சம் மாணவர்கள்

நடைபெறவுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு நாடளாவிய ரீதியில் 3 இலட்சத்து 40 ஆயிரத்து 926 மாணவர்கள் தோற்றவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இப்பரீட்சை 2,907 பரீட்சை நிலையங்களில் இடம்பெறவுள்ளதுடன் 2 இலட்சத்து 54 ஆயிரத்து 373 மாணவர்கள் சிங்கள மொழி மூலமும் 86 ஆயிரத்து 553 மாணவர்கள் தமிழ் மொழி மூலமும் பரீட்சைக்கு தோற்றவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

# பிரகீத் கடத்தலில் திருப்பம் ஐவர் கைதாகி விசாரணை



(கொழும்பு)

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு காணாமற் போனமை தொடர்பாக, மின்னேரியா இராணுவ முகாமில் பணியாற்றிய இரண்டு படையினர் உள்ளிட்ட ஐந்து பேரிடம் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக, குற்றப்புலனாய்வுப் பிரிவு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுதொடர்பாக தகவல் வெளியிட்டுள்ள சண்டேலீடர் ஆங்கில வார்இதழ், இது பற்றிய விசாரணைகள் மூடிய அறைக்குள் மிக இரகசியமாக இடம்பெறுவதாகவும், விசாரணையாளர்களின் விபரங்கள் வெளியிடப்படாது என்றும், குற்றப்புலனாய்வு அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக கூறியுள்ளது.

இதுதொடர்பாக ஐந்து பேரிடம் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதை தாம் அறிந்திருப்பதாக, பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட தெரிவித்துள்ளார்.

விசாரிக்கப்படும் சந்தேகநபர்களில், தமது கணவரின் நண்பர் ஒருவரும் அடங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காணாமற்போன தமது கணவர் தொடர்பான விசாரணையில் திருப்பங்கள் நிகழும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# பாலியல் துஷ்பிரயோக வழக்கு விசேட நீதிமன்று உருவாக்கம்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்ய விசேட நீதிமன்றம் ஒன்று புதிய அரசாங்கத்தின் கீழ் உருவாக்கப்படவுள்ளது.

பிரதமர் ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் வைத்து அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பாலியல் துஷ்பிரயோகங்கள் சம்பந்தமான• வழக்குகளை துரிதமாக விசாரணை செய்து நிறைவு செய்யும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேநேரம் பெண் பொலிஸாரின் பிரச்சினைகள் தொடர்பிலும் விசேட அவதானம் செலுத்தவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்

# அரசியல் தொடர்பாக ஆரூடம் இனி இல்லை

## சோதிடர் சுமணதாச தெரிவிப்பு



(கொழும்பு)

அரசியல் தொடர்பில் இனிமேல் ஆரூடம் கூறமாட்டேன் என, முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் ஆஸ்தான சோதிடர் சுமணதாச அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த 1994ஆம் ஆண்டு முதல் அரசியல் ஆரூடம் கூறி வரும் தனக்கு, கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது பிழைத்து விட்டதாக கூறியுள்ள அவர், இதனால் இனிமேல் அரசியல் ஆரூடம் கூறமாட்டேன் என குறிப்பிட்டுள்ளார்.


இலங்கை வரலாற்றில் ஆளும் கட்சிக்கு எதிராக போட்டியிடும் எதிர் வேட்பாளரை இறுதிவரை அறிந்து கொள்ள முடியாமல் போன ஒரே தேர்தல் கடந்த ஜனாதிபதித் தேர்தல் என அவர் இதன் போது குறிப்பிட்டுள்ளார்.

சோதிடரின் பேச்சை நம்பியே, பதவிக்காலம் முடிவதற்குள் ஜனாதிபதி தேர்தலை அறிவித்தார் மகிந்த ராஜபக்ஷ எனினும் சோதிடரின் வாக்குப் பொய்த்திட, அவர் தேர்தலில் தோல்வியை தழுவிட, சோதிடரோ வெளிநாட்டிற்கு பறந்து விட்டார்.

பின்னர் வந்த சோதிடர், மகிந்த தரப்பால் தனக்கு அச்சுறுத்தல் என்றும், மகிந்த தோற்பார் என தமக்கு முன்பே தெரியும் எனவும் முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களை வெளியிட்டுக்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ரக்பி வீரரின் மரணத்துடன் ஜோசிதவிற்கு தொடர்பில்லை

## மறுக்கிறார் மகிந்த



(கொழும்பு)

ரக்பி வீரர் வசீம் தாஜுதீனின் மரணத்துடன் தனது மகனுக்குத் தொடர்பிருப்பதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிராகரித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது மகன் யோசித ராஜபக்ஷ தொடர்புபட்ட மும்முனைக் காதல் விவகாரத்தினாலேயே, வசீம் தாஜுதீன் கொலை செய்யப்பட்டதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இதுகுறித்து கொழும்பில் நேற்று செய்தியாளர்களை சந்தித்த மகிந்த ராஜபக்ஷவிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

தாஜுதீன் மரணம் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்படுவதை வரவேற்கிறேன். ஏனென்றால், எமது பெயரை இதிலிருந்து விடுவித்துக் கொள்ள உதவியாக இருக்கும்.

ஆனால் இந்த விசாரணையை வைத்து அரசாங்கம் அரசியல் ஆதாயம் தேட முனைகிறது.

அவர்கள் ஆறு மாதங்களாக ஆட்சியில் இருந்தனர். அவர்கள் அதனைச் செய்திருக்கலாம். ஆனால் செய்யவில்லை. இந்த வழக்கில் என்னை மாட்டி விடுவதற்காக இதுவரை காத்திருந்தனர.

நாடாளுமன்றத் தேர்தலில் எமது கட்சி ஆட்சியமைத்தால், தாஜுதீன் கொலை தொடர்பாக விசாரணை நடத்தப்படும். உண்மை வெளிவருவதற்காக விசாரணை நடத்தப்பட வேண்டும். என்று தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தலில் 117 ஆசனங்களை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி கொள்ளும் என்று கூறிய மகிந்த ராஜபக்ஷவிடம், உங்களுக்குப் பிரதமர் பதவி தரமுடியாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளரே என்று செய்தியாளர் ஒருவர் சுட்டிக் காட்டினார்.

அதற்கு மகிந்த ராஜபக்ஷ, ஆகஸ்ட் 18ஆம் திகதிக்குப் பின்னர் அதுபற்றி பொறுத்திருந்து பார்க்கலாம் என்று பதிலளித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 ஆகஸ்ட் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.